விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

க்கங்கள்: பதின்னான்கு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆடி 16 சனிக்கிழமை (01.08.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 225




# வேகமான அதிகாரப் பரவலாக்கம் உள்நாட்டுப் போரை ஏற்படுத்திவிடும்

## ஜனாதிபதி மகிந்த பேட்டி



(கொழும்பு)

வேகமான அதிகாரப் பரவலாக்கல் பயன் எதனையும் தராது. அது ஆபிரகாம் லிங்கன் காலத்தில் அமெரிக்காவில் ஏற்பட்ட உள்நாட்டுப் போரைப் போன்ற ஒன்றை இங்கும் ஏற்படுத்திவிடும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இந்தியாவிலிருந்து வெளியாகும் தெகல்கா இணையத்தளத்துக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (14ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாணத்தில் இன்றுமுதல் ஆயுதங்களை வைத்திருக்க முடியாது

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்று முதலாம் திகதி முதல் பொலிஸ் மற்றும் பாதுகாப்பு படையினரைத் தவிர வேறு எவரும் ஆயுதங்களை வைத்திருக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள் என கிழக்கு பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் எடிசன் குணதிலக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை மட்டக்களப்பு வேதநாயகம் மண்டபத்தில் வர்த்தகர்கள் மற்றும் தொழில் அதிபர்கள் கலந்து கொண்ட கூட்டமொன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். (பத்மநாபா அணி), ரி.எம்.வி.பி. ஆகிய அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்த இக் கூட்டத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய பொலிஸ் மா அதிபர் எடிசன் குணதிலக்க,

வர்த்தகர்கள் தொடர்ந்து கப்பம் கொடுப்பதையும், (14ஆம் பக்கம் பார்க்க)

## வவு.நலன்புரி முகாமிலுள்ள யாழ்.மக்களை அமைச்சர் டக்ளஸ் பொறுப்பேற்கிறார்

(வவுனியார்)

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வந்து வுனியா நலன்புரி நிலையங்களில் தற்லிகமாக தங்க வைக்கப்பட்டுள்ள யாழ். வட்ட மக்களை ஈழமக்கள் ஜனநாயகக் யின் செயலாளர் நாயகமும் சமூக சேவை மற்றும் சமூக நலத்துறை அமைச்சருன டக்ளஸ் தேவானந்தா பொறுப்பேற்கவுள்ளார்.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ள மக்களது நலன்கள் தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடி தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அம் மக்களை சொந்த இருப்பிடங்களுக்கு அனுப்பி வைப்பதற்கும் சொந்த இடங்களில் மீளக் குடியமர்வதற்குமான நடவடிக்கைகளையும் எடுத்துவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இதன் முதற்கட்டமாக யாழ்.மாவட்டத்திலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஆயிரத்து 141 (14ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய வெளியுறவுச் செயலராக நிருபமா இன்று பதவியேற்பு



(புதுடில்லி)

பாகிஸ்தானுடனான உறவுகள் நெருக்கடியாக இருக்கும் சூழ்நிலையில், இந்தியவெளியுறவுத்துறை புதிய செயலாளராக, நிருபமா ராவ் இன்று பதவியேற்கிறார்.

வெளியுறவுத்துறை செயலராக இருந்த சிவ்சங்கர் மேனன் நேற்றுடன் ஓய்வு பெற்றார். (14ஆம் பக்கம் பார்க்க)

## பந்தனைகள் எதுவுமின்றியே ாணய நிதியத்திடமிருந்து கடன்

### அரசு அறிவிப்பு

(கொழும்பு)

கடன் வழங்குவதற்காக சர்வதேச நாணய யம், நிபந்தனைகள் எதனையும் விதிக்க ல்லை. இருந்த போதிலும் நிதியத்துக்கும் சாங்கத்துக்குமிடையில் இணக்கப்பாடு ப்பட்டுள்ளது என்று ஊடகத்துறை முத ஊக்குவிப்பு அமைச்சரும் அமைச்சரவையின் பேச்சாளருமான அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தில் 1950ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29ஆம் திகதி உறுப்புரிமை பெற்றுக்கொண்ட இலங்கை 14 தடவைகள் கடனுதவிகளை பெற்றுக்கொண்டுள்ளது. 15-வது தடவையாக 2.6 பில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி கிடைத்துள்ளது.

அரசாங்கத்தின் (14ஆம் பக்கம் பார்க்க)

## கல்வி அமைச்சர் தலைமையில் கல்வித்துறை அபிவிருத்தி மாநாடு

### திங்களன்று வீரசிங்கம் மண்டபத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கல்வித்துறை அபிவிருத்தி மாநாடொன்று நாளை மறுதினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த தலைமையில் நடைபெறவுள்ளது.

இம் மாநாட்டில் சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வி.இராசையா, யாழ்.மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள் உட்பட கல்வித்துறை சார்ந்தவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இம் மாநாட்டில் (14ஆம் பக்கம் பார்க்க)

## ிராணுவத் தளபதி யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜென ஜெகத் ஜெயசூரிய யாழ்ப்பாணம் பகு நேற்றுக்காலை விஜயம் செய்தார்.

யாழ்ப்பாணத்தின் தற்போதைய பாது பு நிலைமை தொடர்பாக ஆராய்வதே இரா வத் தளபதியின் இந்த விஜயத்தின் நோக் கும். இராணுவத் தளபதியாக பொறுப் ற பின்னர் லெப்டினன்ட் ஜெனரல் ஜெகத் யசூரிய யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த லாவது (14 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதம்

(கொழும்பு)

கொழும்பு சிறைச்சாலையில் நீதிமன்ற உத்தரவின் பேரில் வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் உண்ணாவிரதப் போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளனர்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வைக்கப்பட்டுள்ள 200க்கும் மேற்பட்ட தமிழ் கைதிகளே இப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக சிறைச்சாலை தகவல்கள் மூலம் அறிய முடிகின்றது.

விடுதலை அல்லது பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டும் என்ற பிரதான கோரிக்கையை முன்வைத்துள்ள இக் கைதிகள் தங்கள் மீதான விசாரணை தங்களது மாவட்ட நீதிமன்றங்களிலேயே நடைபெற வேண்டும் என்ற மற்றுமொரு கோரிக்கையையும் முன்வைத்துள்ளனர்.

குறித்த கைதிகள் தமது போராட்டம் தொடர்பாக நீதி மற்றும் சட்ட அமைச்சு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் மனித உரிமைகள் அமைப்புகள் உட்பட பல்வேறு தரப்பினருக்கும் அறிவித்துள்ளதாக உறவினர்களின் தகவல்கள் (14ஆம் பக்கம் பார்க்க)



யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற தேர்தல் ஆவணி -08

ஆனந்தசங்கரி 1 X

(தமிழர் விடுதலைக் கூட்டணி)

தமிழர் விடுதலைக் கூட்டணி X

தமிழ் மக்களின் வாழ்க்கையை வளமாக்க உதய சூரியனை ஆதரிப்போம். இதற்காக தலைவரையும் கந்தையனையும் ஆதரிப்போம். புள்ளடி இடுவோம்.

செ.கந்தையன் 8 X X

(முன்னாள் மாநகர முதல்வர்)

-ஆதரவாளர்கள். (3031)



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சரத்பொன்சேகாவின் பாதுகாப்பு குறைப்பை பிரசாரத்துக்கு பயன்படுத்த ஜே.வி.பி. திட்டம்

(கொழும்பு)

கூட்டுப்படைகளின் பிரதம அதிகாரி சரத் பொன்சேகாவின் பாதுகாப்பைக் குறைப்பதற்கு அரசு எடுத்துள்ள நிலைப்பாட்டிற்கு எதிராக மக்கள் ஆதரவைத் திரட்டும் வகையில் ஜனாதிபதி தேர்தலுக்கான தமது பிரசார நடவடிக்கைகளை ஜே.வி.பி எதிர்வரும் 10 ஆம் திகதி தொடங்கவிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் முக்கிய பங்கை வகித்த சரத் பொன்சேகா, போர் முடிபுக்கு வந்து ஒரு மாத காலத்துக்குள்ளேயே அப் பதவியில் இருந்து நீக்கப்பட்டு அதிகாரங்கள் அற்ற கூட்டுப்படைகளின் தலைமை அதிகாரி பதவிக்கு நியமிக்கப்பட்டமையை ஜே.வி.பி உட்பட பல்வேறு அமைப் புக்களும் விமர்சித்து வருகின்றன.

இந்நிலையில் போர்வெற்றியை தமது அரசியல் வெற்றியாக்கிக் கொள்வதற்கு வியூகம் வகுத்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் ஜனவரி மாதத்தில் ஜனாதிபதி பதவிக்கான தேர்தலை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளார்.

இனவாத அடிப்படையில் அவர் தேர்தலை எதிர்கொள்ளும் போது அதற்கு எதிரான பிரசாரத்தை மேற்கொள்வதில் ஜே.வி.பி, சரத்பொன்சேகா விவகாரத்தை முதன்மைப்படுத்துவதற்கு முற்பட்டிருக்கின்றது.

சரத்பொன்சேகாவின் பாதுகாப்பு குறைக்கப்பட்டிருப்பதையிட்டு உயர்நீதிமன்றத்தின் கவனத்திற்கும் கொண்டு வருவதற்கும் திட்டமிட்டுள்ள ஜே.வி.பி நாடாளுமன்றத்திலும் இது தொடர்பான விவாதம் ஒன்றுக்கும் முன்னறிவித்தல் கொடுப்பதற்கும் தீர்மானித்திருக்கின்றது.

இது தொடர்பாக ஜே.வி.பி மேற் கொண்டிருக்கும் நடவடிக்கைகளுக்கு புத்த பிக்குகள், சிங்கள கல்விமான்கள் உட்பட பலரின் ஆதரவும் பெருமளவு கிடைத்திருப்பதாகத் தெரிவித்திருக்கும் ஜே.வி.பி. வட்டாரங்கள், அரசுக்கு எதிராக சரத் பொன்சேகா என்ற ஆயுதத்தை ஜே.வி.பி. பயன்படுத்துவது அரசுக்கு பெரும் சங்கடமான நிலையை ஏற்படுத்துவதாக இருக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளன.

இதேவேளையில் ஜே.வி.பி யின் இணையத்தளம் மற்றும் ஜே.வி.பியின் ஊடகங் களும் இதற்கு ஆதரவான பிரசாரத்தை மேற் கொள்ள தொடங்கியிருக்கின்றன.

இது ஜே.வி.பி. எடுக்கப் போகும் நிலைப்பாட்டை தெளிவாக வெளிப்படுத்துவதாக இருக்கும் எனக் கருதப்படுகின்றது. (ச-5)

## சிவில் பாதுகாப்பு குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொலிஸ் பிரிவின் சிவில் பாதுகாப்பு குழுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மின்சார அபிவிருத்தி அமைச்சர் மகிந்தானந்தா அளுத்கமகே தலைமையில் நடைபெறவுள்ளதாக யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (ச-5)


## அலங்கார உற்சவத்திற்கு ஆலயத்திற்கு செல்ல அனுமதி

மிருசுவிலில் படித்த மகளிர் திட்டம் துர்க்காபுரம் ஸ்ரீ ஞானதுர்க்கா அம்பாள் ஆலய அலங்கார உற்சவத்தை முன்னிட்டு பக்தர்கள் ஏ-9 பாதையூடாக அவ் ஆலயத்துக்கு வாகனங்களில் செல்ல அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக ஆலய தர்மகர்த்தா சபை அறிவித்துள்ளது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் பாதுகாப்புத் தரப்பினரிடமிருந்து இவ் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச)

## தொண்டர் ஆசிரியர்களுடன் கலந்துரையாடல்

யாழ் மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சமூக சேவை மற்றும் சமூக நலத்துறை அமைச்சு காரியாலயத்தில் நடைபெற உள்ளதால் சகல தொண்டர் ஆசிரியர்களையும் ஒன்று கூடுமாறு தொண்டர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது. (ச)



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா நேற்றைய தினம் காலை சுதுமலை அம்மன் ஆலயத்திற்கு சென்று பூஜை வழிபாடுகளில் ஈடுபடுவதை படத்தில் காணலாம்.

## தொப்புள் கொடியுடன் ஆண் சிசு கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். மீனாட்சிபுரம் பகுதியில் உள்ள கிணற்றொன்றிலிருந்து தொப்புள் கொடியுடன் ஆண் சிசு ஒன்றின் சடலம் நேற்று மீட்கப்பட்டது. சிறுமி ஒருவர் கொடுத்த தகவலையடுத்து அங்கு சென்றவர்கள் கிணற்றிலிருந்து சடலத்தை மீட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பாக யாழ் மாவட்ட நீதவான் ஆனந்தராஜா நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்டார். இச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## யாழ்.சதொசவில் நேற்று மட்டும் 10 இலட்சம் ரூபாய்க்கு விற்பனை

(கொழும்பு)

யாழ்.சதொச விற்பனை நிலையத்தில் நேற்று மட்டும் 10 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்வரை பொருட்கள் விற்பனையானதாக மின்சக்தி அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

யாழ்ப்பாணத்தில் சதொச விற்பனை நிலையம் திறக்கப்பட்ட நாளிலிருந்து தினமும் 9 இலட்சம் ரூபாய்க்கு மேலாக பொருட்கள் விற்பனையாகின.

நேற்று மட்டும் 10 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கு பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. தற்போது முதல் கட்டமாக எடுத்து வரப்பட்ட பல பொருட்கள் முடிபடைகின்ற நிலையில், சகல பொருட்களும் நேற்று ஏ-9 வீதியூடாக லொறிகளில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனவே யாழ். மக்கள் நாளை முதல் சகல பொருட்களையும் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் யாழ் மாவட்டத்தில் விரைவில் சகல இடங்களிலும் சதொச கிளைகளை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார் எனவும் அமைச்சர் கூறினார். (ச-5)

## மூளாயில் ஆலயங்களை உடைத்து 1 கோடி ரூபாய் பெறுமதியான தங்க நகைகள் கொள்ளை!

(வட்டுக்கோட்டை)

மூளாய்மதுரன்புலோவிலுள்ள சித்தி விநாயகர் ஆலயம் மற்றும் முத்துக்குமார சாமி ஆலயம் ஆகியவற்றில் நேற்று முன்தினம் இரவு திருட்டு இடம்பெற்றுள்ளது.

சித்தி விநாயகர் ஆலயத்தில் சுமார் ஒரு கோடி ரூபாய் பெறுமதியான 80 பவுண் தங்கத்திலான பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளனர்.

தங்க குடை, முடி, பதக்கங்கள் மற்றும் நகைகள் என்பனவே திருடப்பட்டுள்ளன. அத்துடன் பிள்ளையார் விக்கிரகத்தை தகர்த்து அதற்கு அடியில் இருந்த பெறுமதியான தங்கத்தகடும்திருடப்பட்டுள்ளதாக பொலிஸாரின் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முத்துக்குமாரசாமி ஆலயத்தில் விக்கிரகங்களை உடைத்தும் உண்டியல்களை உடைத்து பணத்தையும் திருடர் கள்எடுத்துச்சென்றுள்ளதாகமுறையிடப்பட்டுள்ளது.

இரண்டு ஆலயங்களிலும் கதவுகள் உடைக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப் பட்டது. (ச-27)


### கண்ணீர் காணிக்கை



மண்ணில் 12 ❖ 06 ❖ 1987

விண்ணில் 18 ❖ 07 ❖ 2009

அகஸ்றின் கிறிஷான்

நட்பு எனும் நந்தவனத்தில் – நாமெல்லாம்
வாடாத பூக்கள் என வாழ்ந்திருந்தோமே
ஆனால் ---!
நீ மட்டும் உதிர்ந்து விட்ட --
உண்மையை உணர – எம் மனம்
மறுக்குதடா ---

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

பிரிவால் துயருறும்
A/L – 2006 Batch, பரி. யோவான் கல்லூரி

[3049]


## மல்லாகத்தில் கொள்ளையர்கள் அட்டகாசம்

## ஆலயத்திற்குச் சென்ற பூசகரை வழிமறித்துச் சங்கிலி அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

அச்செழுவிலிருந்து தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்திற்கு வரலட்சுமிவிரத வழிபாட்டுக்காகச் சென்ற பூசகரையும் அவர் மனையையும் மல்லாகம் புன்னாலைக்கட்டுவன் வீதியில் வழி மறித்த கும்பலொன்று, அவர்கள் அணிந்திருந்த தங்க நகைகளை அபகரித்துச் சென்றுள்ளது. இச் சம்பவம் நேற்று பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

வரலட்சுமி பூசை வழிபாட்டிற்காக அச்செழு மீனாட்சி அம்மன் ஆலய பூசகர் ரா .சிவாஜிலிங்கம் (வயது 60) அவரது. மனைவி சி. சரஸ்வதி (வயது 54) ஆகிய இருவரும் சைக்கிளில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்திற்கு சென்றுள்ளனர்.

அவர்கள் இருவரும் மல்லாகம் புன்னாலைக் கட்டுவன் வீதியில் சென்று கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பூசகரின் சைக்கிளை தள்ளி விழுத்தி விட்டு பூசகரின் மனைவி அணிந்திருந்த 2 பவுண் சங்கிலி மற்றும் 7 1/2 பவுண் தாலிக்கொடி என்பவற்றை அறுத்து சென்றுள்ளனர்.

இலக்கத் தகடு இல்லாத சிவப்பு நிற ரி.வி.எஸ் மோட்டார் சைக்கிளில் வந்தவர்களே சங்கிலி அறுப்பு சம்பவத்தில் ஈடுபட்டதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

கொள்ளையர்களை துரத்திச்சென்ற போதிலும் அவர்களை பிடிக்க முடியாது போனதாகவும் தெரிவிக்கப்பட்டது. சன நடமாட்டம் இருந்தபோதே இச் சம்பவம் இடம் பெற்றதாக சுட்டிக்காட்டப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ச)

# இன்று ஒரு தகவல்

## துறவு

ஒரு வைர வியாபாரி இருந்தார். அவரும் அவருடைய மனைவியும் தான். அவர்களுக்கு குழந்தைகள் இல்லை. மிகவும் தர்ராளமனம் படைத்தவர்கள். இருக்கும் செல்வத்தையெல்லாம் வாரிவாரி வழங்கினார்கள்.

அப்படி இருந்தும் முழுமையான மன நிறைவு கிடைக்கவில்லை.

அவர் ஒருநாள் தனது மனைவியிடம், "இதோபார் ... நான் துறவு மேற்கொண்டு இந்த ஊரைவிட்டு போகப் போகிறேன். அதனால் அதற்கு முன் இருக்கும் சொத்துகளையெல்லாம் தான தருமம் பண்ணப் போகிறேன். அதனால் உனக்கு என்னென்ன தேவையோ அதையெல்லாம் முதலில் நீ எடுத்துக்கொள்" என்றார்.

அந்த அம்மா பார்த்தார்.

"நீங்கள் போன பின் எனக்கு மட்டும் என்ன இருக்கிறது? பிள்ளையா? குட்டியா? நானும் உங்களுடன் வந்துவிடுகிறேன்" என்றார்.

உன்னால் ஊர் சுற்ற முடியாது. காடுமேடெல்லாம் அலைய முடியாது. பசி – பட்டினி –குளிர் –வெயில் எல்லாவற்றுக்கும் ஈடுகொடுக்க வேண்டியிருக்கும். அதனால் உனக்கு இது வேண்டாம்" என்றார்.

ஆனால் அந்த அம்மா பிடிவாதமாக இருந்தார். நான் வந்தே தீருவேன் என்று உறுதியாக சொல்லிவிட்டார்.

வேறு வழியில்லாமல் அவரையும் அழைத்துக் கொண்டு அவர் புறப்பட்டார்.

அதற்கு முன் இருப்பதையெல்லாம் வாரிவாரி வழங்கினார்கள். கடைசியாக கழுத்திலுள்ள நகைகளையும் கழற்றினார் அந்த அம்மா.

"என்ன இது... அதையும் கழற்றுகிறாய். நம் திருமணத்தின் அடையாளமே அதுதானே" என்றார் இவர்.

"எப்பொழுது நாம் துறவு வாழ்க்கையைத் தொடங்கிவிட்டோமோ அப்பொழுதே கணவன் மனைவி என்ற பந்தமெல்லாம் போய்விட்டது. இனி நான் வேறு... நீங்கள் வேறு... இருந்தாலும் நாம் இப்பொழுது ஒன்றாகச் சேர்ந்து போவது எதற்கென்றால் ஒருவருக்கொருவர் உதவியாகத்தான்.

கழுத்தில் ஒரு சங்கிலி கிடந்தால், கஷ்டம் வரும்போது அதை விற்றுக் காசாக்கலாம் என்ற எண்ணம் வரும்... அதனால் அது வேண்டாம் என்று சொல்லிவிட்டார்.

அதன்பின் அவர்களிருவரும் பல ஊர் சுற்றினார்கள். வெயில், மழை, பசி, பட்டினி... அவருக்கு அந்த அம்மாவைப் பார்க்க பாவமாக இருந்தது. இவ்வளவு கஷ்டத்துக்கும் ஈடு கொடுக்கிறாளே – என்று ஆச்சரியமாகவும் இருந்தது.

"நீ ஊருக்குத் திரும்பிப் போய்விடேன்" என்று சொல்லிப் பார்த்தார்.

"சுவாமி... நீங்கள் இப்பொழுது எம் கணவரல்ல... உம் பேச்சை யாம் கேட்பதற்கு" என்றார்.

இப்படியே சிறிது காலம் போய்விட்டது.

ஒருநாள் அவர்களிருவரும் ஒரு காட்டு வழியாகப் போய்க் கொண்டிருந்தார்கள்.

வழியில் ஒரு பெரிய மாணிக்கக் கல் கிடந்தது. முன்னால் போய்க் கொண்டிருந்த அவர் இதைப் பார்த்து விட்டார்.

"பின்னால் வந்து கொண்டிருக்கும் தனது மனைவியின் கண்ணில் இது பட்டுவிட்டால் மறுபடியும் உலக ஆசை வந்து... சந்நியாசத்தை விட்டாலும் விட்டு விடுவாள்" என்று நினைத்து அதைக் காலால் மிதித்து மறைத்தார்.

பின்னால் வந்த அந்த அம்மா, "அது என்ன சுவாமி... காலால் மிதித்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"இது வந்து... மாணிக்கக்கல்...! இதைப் பார்த்து உனக்கு உலக ஆசைகள் வந்து மனம்மாறிப் போய் விடுமோ என்று பயந்து தான் இதை மறைத்தேன்" என்றார் அவர்.

இதற்கு அந்த அம்மா சொன்னார்.

"சுவாமி தங்களுக்கு இன்னமும் மாணிக்கத்துக்கும் மண்ணாங்கட்டிக்கும் வித்தியாசம் தெரிகிறதா? எனக்கு இரண்டும் ஒன்றுதான்" என்றாராம்.

இதிலிருந்து என்ன தெரிகிறது... துறவென்பது அவ்வளவு சாதாரண ஒன்றல்ல!

"எனக்கென்று இருக்கும் எல்லாவற்றையும் விட்டு விட்டு சந்நியாசம் வாங்கிக் கொள்ளப் போகிறேன்" என்றார் ஒருவர்.

"உனக்கென்று இருப்பது எவ்வளவு?" என்றேன்.

"எல்லாவற்றையும் கூட்டிப் பார்த்தால் மொத்தமாக ஒரு 50 ஆயிரம் தேறும்" என்றார்.

"என்ன... சொத்தா..." என்று கேட்டேன்.

"இல்லை... கடன்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## பண்ணை வீதி மீண்டும் சேதமடைந்துள்ளது

(ஊர்காவற்றுறை)

யாழ்ப்பாணத்திலிருந்து தீவகத்திற்குச் செல்லும் பண்ணை வீதி அண்மையில் புனரமைப்பு செய்யப்பட்ட போதிலும் மீண்டும் இரு பக்கங்களிலும் கற்கள் தகர்ந்தும் பள்ளங்கள் விழுந்தும் போக்குவரத்துச் செய்ய முடியாதவாறு இருப்பதாக பயணிகள் தெரிவித்தனர்.

கடந்த 2008 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட நிஷா புயல், வெள்ள அனர்த்தம் காரணமாக வீதிக் கற்கள் அள்ளுண்டு பலத்த சேதம் ஏற்பட்டன.

பின்பு புனரமைப்பு செய்யப்பட்ட போதிலும் இன்னும் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் பயணிகள் தெரிவித்தனர்.

(ஓ-72)

## சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு

# தேசிய சிறுவர் மன்றத்தை ஸ்தாபிக்க நடவடிக்கை

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் அளவில் தேசிய சிறுவர் மன்றத்தை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக சிறுவ்ர் நன்னடத்தை மற்றும் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம் கூறுகின்றது.

இதன் முதற்கட்டமாக மாவட்ட மற்றும் மகாண மட்டத்திலான சிறுவர் மன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் ஆணையாளர் சரத் அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

இலங்கை சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பாக தேசிய மட்டத்தில் குரல் கொடுப்பதற்கான உரிய கட்டமைப்பொன்று இல்லாமை பெரும் குறையாக உள்ளதென அவர் சுட்டிக் காட்டினார்.

இந்த நிலைமையைக் கருத்திற்கொண்டே தேசிய சிறுவர் மன்றத்தை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இதன் மூலம் சிறுவர்கள் தமது பிரச்சினைகளை நேரடியாகவே அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வருவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும் என சிறுவர் நன்னடத்தை மற்றும் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளர் குறிப்பிட்டார்.

(ஓ-4)

# விண்ணப்பம் கோரல்

### தொழில் திணைக்கள தொழில் அலுவலர் பதவிக்கான ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சை

தொழில் திணைக்களத்திற்கு தமிழ் மொழிமூல தொழில் அலுவலர்களை ஆட்சேர்ப்பதற்கான திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எதிர்வரும் நவம்பர் மாதம் கொழும்பில் நடத்தப்படவுள்ளது.

திறந்த பரீட்சைக்கு தோற்றுபவர்கள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரியாகவோ அல்லது சட்டத்தரணியாகப் பணியாற்றுவதற்கு உரித்துடைய தொழில் தகைமையோ விண்ணப்பம் கோரும் இறுதித் தினத்தில் பெற்றிருத்தல் வேண்டும்.

மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கு தோற்றுபவர்கள் அரச சேவையிலோ மாகாண அரச சேவையிலோ எழுது வினைஞர் அதற்கு சமனான தரத்திலோ, அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையிலோ நிரந்தர ஓய்வூதியத்திற்குரியதான 10 ஆண்டுகால சேவைக்காலத்தை விண்ணப்ப முடிவுத் திகதியன்று பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது அங்கீ கரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன் றில் பட்டம் பெற்றுள்ள அரச சேவை யிலோ, மாகாண அரச சேவை யிலோ எழுது வினைஞர் அதற்கு சமனான தரத்திலோ அல்லது அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையிலோ நிரந்த ஓய்வூதியத்திற்குரியதான 5 ஆண்டுகால சேவைக் காலத்தை விண்ணப்ப திகதியன்று பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக *பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை* என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

### வினைத்திறன் கான் தடைதாண்டல் பரீட்சை

இலங்கை ஆசிரியர் கல்வியலாளர் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆம் தர உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடை தாண்டற்பரீட்சை 2009 நவம்பர் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ளது.

பரீட்சைகள் சிங்களம், தமிழ், ஆங்கி மொழி மூலம் நடைபெறவுள்ளது. உத்தியோகத்தர் ஒருவர் இப்பரீட்சைக்குரிய பாடங்களுக்கு ஒரே தடவையில் அல்லது தனித் தனியான சந்தர்ப்பங்களில் தோற்ற முடியும்.

விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு *பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக்கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பெல்வத்தை, பத்தரமுல்லை* என்ற முகரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கணனி இயக்குநர் பதவி

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தில் கணனி இயக்குனர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பங்களை இம்மாதம் 21 ஆம் திகதிக்கு முன்னதாக காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம், *இல. 07, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தை, கொழும்பு - 07* எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விண்ணப்பங்கள் தொடர்பான மேலதிக விபரங்களை 2009.07.31 வெளியாகிய வர்த்தமானப் பத்திரிகையில் அல்லது வலம்புரிக் காரியாலயத்தில் பார்வையிடலாம்.

(ஓ-14)

## இராசி பலன்

*01.08.2009*
*(ஆடி 16, வெள்ளிக்கிழமை)*
*ஏகாதசி முன்னிரவு 11.16 மணிவரை*
*கேட்டை பின்னிரவு 4.35 மணிவரை*
*இராகுகாலம் 9.03-10.33 மணிவரை*
*சுபநேரம் 3.03-4.33 மணிவரை*
*ஏகாதசி விரதம்*

| | |
|---|---|
| மேடம் | மரியாதைக் குறைவு, ரோக நிலை, முயற்சி தாமதம், போசன சுகம். |
| இடபம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, களஸ்திர நன்மை, தேக நலன், நல்ல செய்தி. |
| மிதுனம் | தொழில் விருத்தி, உறவினர் வருகை, முயற்சி கைகூடும், உற்சாகம். |
| கடகம் | வியாபார நன்மை, பணக் குறைவு, முயற்சி தாமதம், ரோக நிலை. |
| சிங்கம் | மனச்சஞ்சலம், மாதாசுகம், உடல் நலக்குறைவு, தொழில் சிந்தை. |
| கன்னி | எடுத்த காரியம்கைகூடும், சகோதரர் வழி உதவி, தனலாபம், போசன சுகம். |
| துலாம் | கடினவார்த்தை, குடும்பக் கவலை, முயற்சி தாமதம், போசன சுகம். |
| விருச்சிகம் | நண்பர்கள் சந்திப்பு, சிந்தனை மிகுதி, தொழில் விருத்தி, விருந்துபசாரம். |
| தனுசு | காரிய அலைச்சல், உடல் நலக் குறைவு, தனவிரயம், கட்டுப்பாடு. |
| மகரம் | பெரியோர் உதவி, முயற்சி கைகூடும், மனமகிழ்ச்சி, புகழ். |
| கும்பம் | கடின உழைப்பு, பிறர் உதவி, சுபசெய்தி, காரிய அனுகூலம். |
| மீனம் | ஆரோக்கியக்குறைவு, பிரயாணம், கட்டுப்பாடு, எதிர்பாராத செலவு. |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 100 | 110 | 100 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 50 |
| தக்காளி | 150 | 160 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 50 |
| கோவா | -- | 140 | -- |
| கரட் | 90 | 110 | 75 |
| பூசணி | 50 | 60 | 45 |
| புடோல் | 30 | 40 | 30 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 45 | 55 | 30-50 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 60 | 80 | 60 |
| வெண்டிக்காய் | 25 | 30 | 30 |
| கரணைக் கிழங்கு | 60 | 80 | -- |
| பயிற்றங்காய் | 40 | 50 | 30 |
| லீக்ஸ் | 70 | 80 | 80 |
| பீற்றூட் | 40 | 60 | 40 |
| கறிமிளகாய் | 40 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 200 | 220 | 250 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 40 | 60 | 65 |
| தேங்காய் (ஒன்று) | .25 | 25-30 | 30 |

# விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

இ.எஸ். பேரம்பலம் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். பாலர் கல்விக்கழக நிர்வாகத்தில் உள்ள 12 ஞானக்குழந்தை இல்ல பாலர் பாடசாலைகளுக் கிடையிலான 43 ஆவது விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் யாழ்ப்பாணபரியோவான் கல்லூரி ஆசிரி யரும், பாலர் கல்விக்கழக தலைவருமான எஸ். பி. காசிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பிராந்திய உள்ளூராட்சி திணைக்கள உதவி ஆணையாளர் மதுமதி வசந்தகுமார் கலந்து சிறப்பிப்பதுடன் ,சிறப்பு விருந்தினர்களாக இ. எஸ். பி நிறுவன உரிமையாளர் இ. எஸ். பி. நாகரத்தினம், கோப்பாய் ஆசிரியர்கலாசாலை அதிபர் மலர் சின்னையா, கௌரவ விருந்தினராக வலயக்கல்வித் திணைக்கள முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் க. விமலநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கழக செயலாளர் அறிவித்துள்ளார். (ஓ-4)

# செயலமர்வு பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் எதிர்வரும் 5ஆம் திகதி நடைபெற இருந்த க.பொ.த உயர்தரத்தில் உயிரியல் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் அறிவித்துள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ)

# முன்பள்ளி திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

குடத்தனை கிறிஸ்தவ சபை முன்பள்ளி திறப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.ஆயர் வண.தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார் கலந்து சிறப்பிப்பதுடன் விசேட விருந்தினர்களாக கரித்தாஸ் -கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்பணி சி.ஜெயக்குமார், வலி.கிழக்கு உதவி அரசாங்கம அதிபர் எம்.ஸ்ரீஸ்கந்தகுமார், பொற்பதி பிரிவு இராணுவ கட்டளைத் தளபதி எச்.எச்.பி.சி.கல்பகே,யாழ்.மாவட்ட சி.ஏ.சி.எம் பிராந்திய தலைவர் ஏ.ஜெயக்குமாரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-4)

# நல்லூர் மஹோற்சவ கால நிகழ்வுகள்

(நல்லூர்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்தப்படும் சமயச்சொற்பொழிவு மற்றும் கலை நிகழ்வுகளில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.00-6.00 மணிவரை ஈழத்தில் முருக வழிபாடு என்னும் பொருளில் ஆசிரியர் க. ஈஸ்வரனின் சிறப்புச்சொற்பொழிவும் தொடர்ந்து மூளாய் ஞான ஒளி அறநெறிப்பாடசாலைகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடத்தப்படும் தெய்வீக இசையரங்கில் இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிமுதல் 7.30 மணி வரைசி. சூரியகுமாரின் பாட்டு இடம்பெறவுள்ளது.

இதில் அணி செய் கலைஞர்களாக வயலின் ந. ஜனனி , மிருதங்கம் அ. கிருபா தபேலா தசா வேல்மாறன் முகர்சிங் விமல் சங்கர் ஆகியோர் பங்கு பற்றவுள்ளனர். (ஓ)

## அரச அலுவலர்களுக்கான

# பொது நிர்வாக முதுமாணி கற்கை நெறி

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிலையத்தினால் 2009-2011 கல்வி ஆண்டுக்கான பொது நிர்வாக முதுமாணி (MPA) கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இக் கற்கை நெறியை வடமாகாணத்தில் யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களில் இரு நிலையங்கள் மூலம் மேற்கொள்ள வடமாகாண சபை ஏற்பாடு செய்துள்ளது.

மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்கள், மற்றும் திணைக்களங்கள், மாகாண உள்ளூராட்சி நிறுவனங்கள் என்பவற்றில் உள்ள அலுவலர்கள் இதில் பங்குபற்ற முடியும் எனவும் இதில் பங்கு பற்றும் அலுவலர்கள் இளமாணிப் பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை திணைக்களத் தலைவரது சிபார்சுடன் *பிராந்திய ஆணையாளர் இல : 48 காட்டுக் கந்தோர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்* என்னும் முகவரிக்கு இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு யாழ். பிராந்திய ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை www.pim.lk என்னும் இணையதளத்தில் பார்வையிடலாம். (ஓ)

# க.பொ.த உயர்தர பரீட்சை அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தீவகம், தென்மராட்சி, யாழ்ப்பாணம் (கோப்பாய் கோட்டம் தவிர்ந்த) வலய பரீட்சை அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பரீட்சை அலுவலர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ)

# வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி வாய்க்காற்றரவை வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 25ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 4 ஆம்திகதி தேர்த்திருவிழாவும், 5ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

தினமும் விநாயகர் பரத்துவமும் வழிபாடும் எனும் தலைப்பில் அகில இலங்கை சைவப் புலவர் சங்கச் செயலாளர் செ.கந்த சத்தியதாசன் சொற்பொழிவும் நடைபெற்று வருகின்றது. (ஓ)

# தெரிவுப் பரீட்சையும் கருத்தரங்கும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக மென்பொருள் எந்திரவியல் இளமாணிப் பட்ட கற்கைநெறிக்கான தெரிவுப் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் .பிராந்திய நிலையத்தில் நடைபெற வுள்ளது

இதேவேளை நாளை காலை 9 மணி முதல் 12.30 மணிவரை சிறுவணிக முகாமைத்துவக் கற்கை நெறிக்கான கருத்தரங்கும் யாழ்.பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளதாக பிராந்திய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ)

# இரத்த தான முகாம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டு கழகத்தின் 50 ஆவது ஆண்டினை முன்னிட்டு கடந்த 5ஆம் திகதி நடத்தப்பட்ட இரத்த தான முகாமைத் தொடர்ந்து மேலும் பலர் இரத்த தானம் வழங்க முன்வந்துள்ளதால் எதிர் வரும் 5 ஆம் திகதி புதன்கிழமை விசேட இரத்த தானம் வழங்கும் நிகழ்வு பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இரத்த தானம் செய்ய விரும்புபவர்கள் அன்றைய தினம் சமுகமளித்து உயிர்காக்கும் உன்னத பணிக்கு உதவுமாறு பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் கேட்டுக் கொள்கின்றது. (ஓ-6)

# அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக்கல்லூரியில் க.பொ.த. உயர்தரம் 2009 பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் இன்று சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு வழங்கப்படவுள்ளதாக கல்லூரி அதிபர் வீ. கணேசராசா தெரிவித்துள்ளார்.

எனவே உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் சமூகமளித்து பரீட்சை அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அதிபர் கேட்டுக் கொள்கின்றார். (ஓ-6)

◆ ◆ ◆

கொக்குவில் இந்துக் கல்லூரியில் 2009 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கும் க.பொ.த. (உ.த)ப் பரீட்சைக்கான அனுமதி அட்டை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வழங்க இருப்பதனால் 1ஆம், 2ஆம் தடவை தோற்றும் மாணவர்களை பெற்றோருடன் வருகைதருமாறு கல்லூரி அதிபர் கேட்டுக் கொள்கின்றார். (ஓ)

# உள்ளூராட்சி வார சிறப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வலி மேற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வில் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு டெங்கு ஒழிப்பு சிரமதான பணி என்பனவும் நண்பகல் 12 மணிக்கு சுகாதாரப் பொதி வழங்கலும் இடம்பெறவுள்ளது.

சுழிபுரம் பிரதேச சபை செயலாளர் ச. புத்த சிகாமணி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வை. எம். சி.ஏ. தலைவர், டாக்டர். ரி. டபிள்யூ. ஜெயகுலராஜா, கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ். குரு முதல்வர் அருட்பணி எஸ்.பி. நேசகுமார், அடிகளார் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தினேஸ் ஜெயக்குமாரன், கௌரவ விருந்தினர்களாக முன்னாள் வலி மேற்கு பிரதேச சபை தலைவர் வே. மகேந்திரம், கிராம அலுவலர்களான நா.க. விஜயவேல் எம். ஸ்ரீ முருகவேள், சி. சிவகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து வண ரி. எஸ். யோசுவா அடிகளாரின் டெங்கு ஒழிப்பு தெருக்கூத்தும் இடம் பெறவுள்ளது. (ஓ)




# சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் கிழக்கு குமாரசுவாமி வீதி குருநாத சுவாமி கோவிலில் கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 30 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் 7 ஆம் திகதி மண்டலாபிஷேகப் பூர்த்தியன்று 1008 சங்காபிஷேகமும் திருவூஞ்சலும் நடைபெறும்.

தொடர்ந்து தினமும் கந்தனின் காவியம் எனும்தலைப்பில் வலிகாமம் கல்வி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் சைவப் புலவர் செ.கந்தசத்தியசதாசனின் சொற்பொழிவும் நடைபெற்று வருகின்றது. (ஓ)







சுயேச்சைக்குழு -1 கட்சியின் கிளைக்காரியாலயம் அண்மையில் மானிப்பாய் வீதி ஒட்டுமடச் சந்திக்கருகில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் முதன்மை வேட்பாளர் சுபியான் மௌலவி, வேட்பாளர் ஸ்ரீபாலகிருஷ்ணன் ஆகியோர் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# பங்குச் சந்தைக்கு ஓர் அறிமுகம்

### பங்குச் சந்தை என்றால் என்ன?
### What is stock market?

பொதுக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட பங்குகள் மற்றும் தொகுதிக்கடன்கள் போன்ற பிணைகளை கொள்வனவு விற்பனை செய்வதற்குரிய தளம் அல்லது இடம் பங்குச் சந்தை எனலாம். கம்பனிகள் பொது மக்களுக்கு பங்குகளை/தொகுதிக்கடன்களை வழங்குவதன் மூலம் பங்குச் சந்தையினுள் பிரவேசிக்கின்றன.



சில கம்பனிகள் முதனிலை வழங்கல் (*Initial Public Offer – IPO*) மூலம் புதிய பங்குகளை அல்லது தொகுதிக் கடன்களை வழங்குகின்றன. வேறு சில கம்பனிகள் தம்மிடம் உள்ள பங்கு மூல தனத்தில் ஒரு பகுதியினை மட்டும்விற்பனை செய்கின்றன . இதனை விற்பனை வழங்கல் (*Offer For Sale*) என அழைக்கப்படுகின்றது. இவ்விரு சந்தர்ப்பங்களிலும் முதலீட்டாளர்கள் பங்குகளுக்கான அல்லது தொகுதிக்கடன்களுக்கான பெறுமதியை செலுத்தி பெற்றுக் கொள்கிறார்கள்.

பங்குகள் அல்லது தொகுதிக்கடன்கள் முதலீட்டாளர்களுக்கு ஒதுக்கப்பட்டவுடன் அவர்கள் அக்கம்பனியின் பங்குதாரர்கள் அல்லது தொகுதிக்கடன்தாரர்கள் ஆக முடியும். இவர்கள் தம் வசம் உள்ள பங்குகளை அல்லது தொகுதிக் கடன்களை பங்குச் சந்தையில் சுதந்திரமாக விற்பனை செய்ய முடியும்.

கொழும்பு பங்குச் சந்தையானது விலை கோரிப் பெற்ற *(Listed)* கம்பனிகளின் பங்குகள் / தொகுதிக்கடன்களை கொள்வனவு, விற்பனை செய்வதற்கான ஓர் துணை நிலைச் சந்தையாக *(Secondary Market)* தொழிற்படுகின்றது.

துணை நிலைச்சந்தையில் பங்குகள் தொகுதிக் கடன்களுக்கான விலையானது அவற்றின் கேள்வி நிரம்பல்களுக்கேற்ப நிர்ணயிக்கப்படுகின்றது.

### கொழும்பு பங்கு பரிவர்த்தனை என்றால் என்ன?
### *(What is the Colombo Stock Exchange?)*

கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை என்பது இலங்கையில் பங்குச் சந்தையின் செயற்பாடுகளை இயக்கும் நிறுவனமாகும். இது 1982 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டதும் பொறுப்புக்கள் உத்தரவாதத்தினால் (*Limited by Guarantee)* வரையறுக்கப்பட்டதுமான ஓர் நிறுவனமாகும்.

இந்நிறுவனம் இலங்கையில் பங்குப் பரிவர்த்தனை நிறுவனமாக தொழிற்படுவதற்காக இலங்கைப்பிணைகள்பரிமாற்று ஆணைக்குழு *(SEC)* வினால் உரிமம் அளிக்கப் பட்ட ஒரு நிறுவனமாகும். இலங்கைப் பிணைகள் பரிமாற்று ஆணைக்குழு இலங்கையின் பங்குச்சந்தையை ஒழுங்கு படுத்தும் ஓர் அரச நிறுவனமாகும்.

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையானது தன்னகத்தே 21 அங்கத்துவ நிறுவனங்களை முதலீட்டாளர்களுக்கும் கம்பனிகளுக்கும் இடையில் பல வகையான சேவைகளை வழங்கும் இடை நடுவர்களாகக் கொண்டுள்ளது. இவ்வனைத்து நிறுவனங்களும் கொழும்புப் பிணைகள் பரிமாற்று ஆணைக்குழுவின் சட்ட திட்டங்களுக்குட்பட்டவையாகவும் ஆண்டு தோறும் அவை செயற்படுவதற்குரிய அனுமதிப் பத்திரங்களைப் புதுப்பிக்க வேண்டிய நிறுவனங்களாகவும் காணப்படுகின்றன.

கொழும்பு பங்குப்பரிவர்த்தனையானது 4 ஆம் மாடி மேற்கு கட்டிடம் உலக வர்த்தக மையம் எக்கலன் சதுக்கம்*(Echelon Square)* கொழும்பு 01 என்ற முகவரியில் இயங்குகின்றது. இது தனது கிளைகளை மாத்தறை கண்டி குரு நாகல் மற்றும் நீர்கொழும்பு போன்ற மாவட் டங்களில் நிறுவியுள்ளது.

### பங்கு என்றால் என்ன?
### *What is a share?*

ஒரு கம்பனியின் மீது ஒருவர் கொண்டுள்ள உரிமையினை வெளிப்படுத்துவதே பங்கு எனப்படும். இப்பங்குகளை உடமையாக்கொள்வதன் மூலம் ஒருவர் அக் கம்பனியின் இலாபத்தின் ஒரு பகுதியை அனுபவிக்க முடியும். அதாவது குறிப்பிட்ட கம்பனியின் முன்னேற்றத்தின் மூலம் பங்குதாரர் நன்மை அடைய முடியும்.

உதாரணம் 50,000 பங்குகளை வழங்கிய கம்பனி ஒன்றில் நீங்கள் 500 பங்குகளை வாங்கினால் குறித்த அக்கம்பனியில் ஒரு வீதம் (1%) உடமையை கொண்டுள்ளீர்கள். அக்கம்பனியின் ஒரு பகுதி உடமையாளராக நீங்கள் அக்கம்பனியின் முன்னேற்றத்தின் மூலம் நன்மையடைய முடியும்.

#### சாதாரண பங்கு *Ordinary Share*

* சாதாரண பங்கானது அதனை பெறுபவருக்கு கம்பனியின் உடமையை அவர் பெற்றுக்கொண்ட பங்குகளின் வீதத்திற்கேற்ப வழங்குகின்றது.
* ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு வாக்களிக்கும் உரிமை உண்டு.
* பங்கு இலாபத்தில் ஒரு பகுதியைப் பெறுவதற்கு உரிமை உண்டு.
* கம்பனி முடிவுறுத்தப்படும் சந்தர்ப்பத்தில் கடன்கொடுத்தோர் வைப்புச் செய்தோர் மற்றும் கடன்தாரர்களிற்கான கொடுப்பனவு தீர்வு செய்யப்பட்டதன் பின்னரே சாதாரண பங்குகளிற்கான தீர்ப்பனவு செய்யப்படும்.

#### முன்னுரிமைப் பங்கு *Preference Share*

* முன்னுரிமைப் பங்கானது அதனைப் பெற்றுக்கொள்பவருக்கு வரையறுக்கப் பட்டதான உடமைகளையும் உரிமைகளையும் மட்டுமே வழங்குகின்றது.
* பங்கிலாபம் வழங்கலின் போது முன்னுரிமைப்பங்குகளைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு பங்குலாபம் வழங்கிய பின்னரே சாதாரண பங்குதாரருக்கு பங்குலாபம் வழங்கப்படும்.

அதே சமயம் கம்பனியானது கலைக்கப் படும் போது முன்னுரிமைப் பங்குதாரர் களுக்கு கடன் தீர்ப்பனவின் போதும் முன்னுரிமை வழங்கப்படும்.

### விலை கோரிப்பெற்ற கம்பனி என்றால் என்ன?
### *What is a listed Company?*

விலை கோரிப்பெற்ற (நிரல் படுத்திய) கம்பனி என்பது தனது பங்குகள் தொகுதிக் கடன்களை கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தில் நிரற்படுத்திய ஓர் கம்பனியாகும். கொழும்புப் பங்கு பரிவர்த்தனையூடாக பங்குதாரர்கள் இக் கம்பனியால் வழங்கப்பட்ட பங்குகளை இலகுவாக பரிமாற்றம் செய்து கொள்ள முடியும்.

### கம்பனிகளை பட்டியற்படுத்தல்
### *Listing Companies*

கம்பனிகளைப் பட்டியற்படுத்துவதற்கு கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தில் "CSE" சில விதிமுறைகளைக் கொண்டுள்ளது. அவற்றினை கம்பனிகள் கடைப்பிடிப்பதனூடாக தம்மைப் பட்டியற்படுத்த முடியும்.

* 2007 ஆம் ஆண்டு அமுலுக்கு வந்த கம்பனிச்சட்டத்தின் பிரகாரம் பட்டியற்படுத்தப்பட்ட ஒரு கம்பனி ஆனது தனது பெயருடன் "PLC" என்ற பதத்தினை இணைத்தல் வேண்டும்.Eg:-Hatton National Bank PLC
* பட்டியற்படுத்தல் ஆனது இரு திரைகள் மூலம் நிகழ்கிறது.

1. முதலாந்தரப்பட்டியற் திரை(Main Board)
2. DIRI SAVI Board

* இதனைவிட பட்டியற்படுத்தப்படாத கம்பனிகளின் பங்குகளை கைமாற்றுவதற்கென OTC பட்டியற் திரையும் உள்ளது.

**முதலாந்தரப் பட்டியல் திரையில் பட்டியலிடுவதற்கு:**

* குறித்த கம்பனி குறைந்த பட்சம் 100million ரூபாவுக்கு (Rs.100,000,000) மேற்பட்ட வழங்கிய மூலதனத்தையோ அல்லது சந்தை முதலையோ கொண்டிருக்க வேண்டும்.
* வழங்கிய மூலதனத்தில் குறைந்தது 25%த்தினை பொதுமக்களிற்கு வழங்கியிருக்க வேண்டும்.
* குறைந்தது 1000 பங்குதாரர்களை கொண்டிருக்க வேண்டும். இவர்கள் 100 பங்குகளை கொண்டிருக்க வேண்டும்.

குறித்த கம்பனி குறைந்த பட்சம் தொடர்ச்சியாக 3 வருடங்களாக வரி கழித்த பின் இலாப கரத்தன்மையை வெளிப்படுத்தியிருக்க வேண்டும்.

**டிறிசவி (DIRI SAVI) திரையில் பட்டியலிடுவதற்கு:**

* குறைந்த பட்சம் 3 ஆண்டு காலம் செயற் பாடுகளில் ஈடுபட்டிருக்கும் கம்பனியொன் றை இரண்டாந்தர பட்டியல் திரையில் பட்டிய லிடமுடியும்.
* குறித்த கம்பனி குறைந்த பட்சம் 35 million ரூபாவிற்கு(Rs.35,000,000) மேற்பட்ட வழங்கிய மூலதனத்தையோ அல்லது சந்தை முதலையோ கொண்டிருக்கவேண்டும். **(இது 15மே 2009 இல் இருந்து நடை முறைக்கு வருகிறது)**
* வழங்கிய மூலதனத்தில் குறைந்தது 10%த்தினை பொதுமக்களிற்கு வழங்கியிருக்க வேண்டும்.

### பங்குகள் மூலம் கிடைக்கக்கூடிய நன் மைகள் *Benefits from shares*

பங்குகளை உடமையாகக்கொள்வதன் மூலம் பின்வரும் இரு பிரதான நன்மைகளை பெற்றுக்கொள் முடியும்.

அ) பங்கிலாபம்

ஆ) மூலதன இலாபம்

#### பங்கிலாபம் *-Dividend*

பங்கிலாபமானது கம்பனியின் இலாபங்கள் மற்றும் ஒதுக்கங்களைப் பயன்படுத்தி பங்குதாரர்களுக்கு வழங்குவதற்காக பணிப்பாளர்களினால் பிரேரிக்கப்படும் தொகையே பங்கிலாபம் எனப்படும். பங்கிலாபம் பொதுவாக காசாக வழங்கப்படுகின்றது.

#### மூலதன இலாபம் *(Capital Gain)*

மூலதன இலாபம் என்பது பிணைகளைக் கொள்வனவு செய்த விலையை விட அதிகமான விலைக்கு சந்தையில் விற்பதன் மூலம் பெறப்படும்இலாபமே மூலதன இலாபம் எனப்படும். மூலதன இலாபம் பங்குச்சந்தையில் நிலவும் விலைக்கேற்ப மாறுபடும். மாறாக மூலதன நட்டம் ஏற்படக்கூடி சந்தர்ப்பங்களும் உள்ளது. அதாவது சந்தை விலையானது கொள்வனவு விலையை விடக் குறையும் போது மூலதன நட்டம் ஏற்படும்.

### இவற்றிலும் மேலாகக் கிடைக்கக்கூடிய நன்மைகள் வருமாறு:
### *Further Benefits*

அ) பங்குதாரர் என்ற வகையில் நீங்கள் ஆண்டுப்பொதுக்கூட்டம், விசேட பொதுக் கூட்டம் என்பற்றில் பங்குபற்றுவதற்கும் தீர்மான மெடுத்தலின் போது வாக்களிக்கவும் தகுதியுடையவராகின்றீர்கள்.

ஆ) பங்குப் பத்திரங்களை வங்கியில் பிணையாகக்கொடுத்து கடன் பெற்றுக்கொள்ளக் கூடிய வசதிகளும் உள்ளன.

இ) பணவீக்கம் அதிகமாக உள்ள காலப் பகுதியில் பங்குகள் மீதான முதலீடுகள் ஏனைய முதலீட்டுகளிலும் பார்க்க நன்மையளிக்கும் ஏனெனில் பங்கு விலைமாற்றம் பணவீக்கத்தின் பிரதிபலிப்பையும் கொண்டிருக்கும்.

### பங்குகள் அல்லது தொகுதிக் கடன் களை எப்படி வாங்க முடியும்? *How do purchase shares/debentures?*

ஒருவர் பங்குகளை அல்லது தொகுதிக் கடன்களை வாங்குவதற்கு இரண்டு வழிகள் உள்ளன.

1. புதிய பங்கு வழங் கல்/ முதனிலை வழங்கல் மூலம் (முதலாம் தரச் சந்தை)
2. பங்குத் தரகர் ஊடாக (இரண்டாம் தரச் சந்தை)

### முதலாம்தரச்சந்தை அல்லது முதனிலை வழங்கல் என்றால் என்ன? *What is the primary market ?*

புதிய பங்குகள் மற்றும் தொகுதிக்கடன்களை வழங்குவதற்குரிய இடமே முதலாம் தரச் சந்தை எனலாம். முதலாம் தரச் சந்தையில் பிணைகள் நேரடியாக வழங்குனரிடம் (கம் பனி) இருந்து கொள்வனவு செய்யப்படுகின்றன. முதனிலைப் பங்கு அல்லது தொகுதிக்கடன்களை வழங்குவதற்காக கம்பனி முன்விபரணம் *(Prospectus)* எனும் ஓர் ஆவணத்தை வெளியிடுகின்றது.

முன்விபரணம் என்பது பொது மக்களை பங்குகளை அல்லது தொகுதிக்கடன்களை வாங்கு மாறு கோரும் ஓர் அழைப்பாகும். இந்த முன் விபரணம் கம்பனியின் வழங்கல் தொடர்பான விபரங்கள் வியாபார நடவடிக்கைகள் நிதியின் ஸ்திரத்தன்மை எதிர்காலத்திட்டங்கள் பணிப்பாளர்கள் முகாமைத்துவம் தொடர்பான விடயங்கள் மற்றும் கம்பனி என்ன நோக்கத்திற்காக நிதியினைத் திரட்டுகின்றது என்பது தொடர்பான விளக்கத்தினையும் கொண் டிருக்கும்.

நீங்கள் குறிப்பிட்ட வழங்கலின் மூலம் நன்மையடைய முடியும் எனத் தீர்மானித்தால் அந்த முன்விபரணத்தில் உள்ள விண்ணப்பப் படிவத்தினை நிரப்பி செலுத்த வேண்டிய பணத்துடன் குறித்த கம்பனிக்கு நேரடியாக அல்லது பங்குத்தரகருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இவற்றிற்கு முன் முன்விபரணத்தை தெளிவாக வாசித்து இம்முதலீடு நீங்கள் விரும்பும் திரும்பலைத் *(Return)* தரவல்லதா என் பதை அறிந்து கொள்ளல் வேண்டும். தேவை யெனக் கருதினால் நிபுணர்களிடம் ஆலோசனையை பெற்றுக்கொள்ளுங்கள். உங்களது பங்குப் பத்திரங்களை நேரடியாக மத்திய வைப்புத் தொகுதியில் *(CDS)* வைப்புச்செய்யும்படி கோருவது சிறந்தது.

விண்ணப்பப்படிவத்தில் உங்கள் *(CDS)* கணக்கிலக்கத்தையும் ஏனைய தகவல்களையும் நிரப்பி சமர்ப்பிப்பதன் மூலம் நேரவிரயம் பங்குப்பத்திரம் தொலைதல் போன்றவற்றைத் தவிர்த்துக்கொள்ள முடியும். இம் முறையானது உங்கள் பங்குகள் தொகுதிக் கடன்களுக்குரிய மிகச்சிறந்த பாதுகாப்பான முறையாகவும் உள்ளது.

### இரண்டாம் தரச் சந்தை என்றால் என்ன? *What is the Secondary Market?*

ஒரு முதலீட்டாளர் பிணைகளை இன்னும் ஒருவரிடம் இருந்து வாங்கக் கூடிய அல்லது இன்னொருவருக்கு தன்னிடம் உள்ள பிணைகளை விற்கக் கூடிய ஓர் இடம் இரண்டாம் தரப் பங்குச் சந்தை எனப்படும்.

இரண்டாந்தரச் சந்தையில் வியாபாரமானது திங்கள் முதல் வெள்ளி வரை மு.ப 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை நடைபெறும்.

போயா தினம் பொது விடுமுறைகள் வர்த்தக வங்கி விடுமுறைகள் போன்ற விடுமுறை நாட்களில் இந்த இரண்டாம் தரச் சந்தை (பங்குச் சந்தை) இயங்க மாட்டா.

### எனது கொடுக்கல் வாங்கற் செலவுகள் யாவை? *What is my transaction cost?*

கொடுக்கல் வாங்கல் செய்யப்படும் பங்குகளின் பெறுமதி ஒரு மில்லியன் ரூபாவுக்கு குறைவானதாயின்

அக் கொடுக்கல் வாங்கற்பெறுமதியின் 1.425 வீதமும் கொடுக்கல் வாங்கல் செய்யப் படும் பங்குகளின் பெறுமதி ஒரு மில்லியன் ரூபாவுக்கு அதிகமாயின்

அக் கொடுக்கல் வாங்கற்பெறுமதியின் 1.225 வீதமுமாக இருக்கும்.

கொடுக்கல் வாங்கல் செய்யப்படும் பங்குகளின் பெறுமதி பத்து மில்லியன் ரூபாவுக்கு அதிகமாயின்

தரகுக் கட்டணம் பேசித்தீர்மானிக்கப்படும்.

### மத்திய வைப்புத் தொகுதி என்றால் என்ன? *What is the Central Depository System (CDS)?*

மத்திய வைப்புத்தொகுதி என்பது பங்குகள் தொகுதிக் கடன் கள் போன்றவற் றின் கொடுக்கல் வாங்கல் களுக்கான தீர்வக இல்லமாகத் *(Clearing and Settlement House)* செயற்படுகின்றது. நீங்கள் பங்குகள் தொகுதிக் கடன்களைக்கொள் வனவு செய்யுமிடத்து அவை உங்கள் *(CDS)* கணக் கிற்கு மாற்றப்படுகின்றது (செலவு வைக்கப் படுகின்றது) அதே போல் பங்குகள் தொகுதிக் கடன்களை விற்பனை செய்ய வேண்டுமா யின் உங்கள் *(CDS)* கணக்கிலே பங்குகள் தொகுதிக் கடன்கள் வைப்புச்செய்யப்பட வேண் டும். அப் பிணைகள் உங்கள் *(CDS)* கணக் கிலிருந்து வெளியே எடுக்கப்பட்டு (வரவு வைக் கப்பட்டு) அப் பங்கு களை கொள்வனவு செய்ப வரின் *(CDS)* கணக்கிற்கு மாற்றப்படும் (செலவு வைக்கப்படும்) இதுவே ஆவண மற்ற *(Scriptless)* பரிமாற்று நடவடிக்கையின் அடிப்படை ஆகும்.

**B.முகுந்தன்**
முகாமையாளர்
Capitalalliance Securities (Pvt) Ltd
யாழ்ப்பாணம்

(வளரும்)

## நைஜீரியாவில்
# தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கை தொடருகிறது

வடக்கு நைஜீரியாவில் இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கு எதிராக அந்நாட்ட படையினர் தொடர்ந்தும் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

கடந்த நான்கு தினங்களாக இந்த பிரதேசத்தில் இடம்பெற்று வரும் வன்முறைகளில் சுமார் நூற்றியெண்பது மக்கள் உயிரிழந்துள்ளனர்.

நூற்றுக் கணக்கான மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறிவரும் மைடுகிரி நகரில் உள்ள போக்கோ ஹராம் பிரிவின் தலைமையகக் கட்டடம் மீது பாதுகாப்புப் படையினர் ஷெல் தாக்குதல்களை நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

குறைந்தது 30 மக்கள் கொல்லப்பட்டுள்ள அயல் மாநிலமான யோப் இலும் வன்முறைகள் மீண்டும் வெடித்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. பெரும் அயுத பலம் மிக்க குழுவிடமிருந்து கடுமையான பதில் தாக்குதலை எதிர்கொண்டு வருவதாக நைஜீரிய படையினர் தெரிவிக்கின்றனர். (ஓ-6)

# ஸ்பெயின் நாட்டில் குண்டுவெடிப்பு

(மேட்ரிட்)

ஸ்பெயின் நாட்டில் பாதுகாப்பு அலுவலகத்துக்கு வெளியே கார் குண்டு வெடித்ததில் பலர் காயமடைந்தனர்.

ஸ்பெயின் நாட்டின் வடக்கு பகுதியும் பிரான்ஸ் நாட்டின் தெற்கு பகுதியும் இணைந்த பாஸ்க்யூ பகுதியை தனி நாடாக அறிவிக்கக்கோரி இ.டி.ஏ. என்ற அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகள் கடந்த 40 ஆண்டுகளாக போராடி வருகின்றனர்.

இதற்காக இவர்கள் ஸ்பெயின் நாட்டின் பல பகுதிகளில் துப்பாக்கிச் சூடு மற்றும் குண்டுவெடிப்பு சம்பவங்களை நடத்தி வருகின்றனர்.

இவர்களது நாச வேலை காரணமாக 800க்கும் அதிகமானவர்கள் பலியாகியுள்ளனர்.

இந்த அமைப்பைச் சேர்ந்த முக்கிய தீவிரவாதிகள் பலரை ஸ்பெயின் பொலிஸார் கைது செய்து விட்டனர்.

இந்நிலையில் பர்கோஸ் நகரிலுள்ள பாதுகாப்பு படை அலுவலகத்தின் வாசலில் நேற்று முன்தினம் அதிகாலை சக்தி வாய்ந்த குண்டு வெடித்தது.

இந்தக் குண்டுவெடிப்பில் அலுவலக ஜன்னல் கண்ணாடிகள் உடைந்தன. 12க்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர். இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவத்திற்கும் இ.டி.ஏ. தீவிரவாதிகள் தான் காரணமாக இருப்பார்கள் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (ஓ-6)

# மனித உடம்பில் ஒளிக்கசிவு — மாலை 4 மணிக்கு பிரகாசமாகும்
## ஜப்பானிய ஆராய்ச்சியாளர் கண்டு பிடிப்பு

(வோஷிங்டன்)

மனித உடம்பில் கண்ணுக்கு தெரியாத அளவுக்கு வெளிச்சம் கசிவதாக ஜப்பான் ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். உலகில் உள்ள அனைத்து உயிரினங்களின் உடலில் இருந்து மிகக்குறைந்த அளவு ஒளி வெளிவருகிறது.

மனித உடலிலும் இதுபோன்ற ஒளி கதிர்கள் வந்து கொண்டு தான் இருக்கின்றன என ஜப்பானிய ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜப்பானின் கியோடோ பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் ஹிட்டோஷி ஓகமுரா கூறியதாவது,

நம் கண்ணால் பார்க்கும் திறனை விட ஆயிரம் மடங்கு குறைந்த அளவில் உடலில் இருந்து வெளிச்சம் வெளியாகிக் கொண்டிருக்கிறது. காலை 10 மணி அளவில் இந்த வெளிச்சம் மிகக் குறைவாக உள்ளது. மாலை 4 மணிக்கு வெளிச்சத்தின் அளவு அதிகமாகி பின்னர் மெதுவாக குறைந்து விடுகிறது. நம் உடலிலேயே முகத்தில் தான் வெளிச்சத்தின் பிரகாசம் அதிகமாகவுள்ளது.




சூரிய வெளிச்சத்தினால் முகத்தின் தோல் பதப்பட்டு இருப்பதால் அங்கு மட்டும் பிரகாசம் அதிகரிக்கிறது.

ஆரோக்கியமான ஐந்து இளைஞர்களை இருட்டான அறையில் வைத்து, விசேஷ கமராக்கள் மூலம் அவர்கள் உடலில் இருந்து வெளிவரும் வெளிச்சக் கதிர்களைக் கண்டறிந்தோம்.

இந்த ஒளிக்கதிர்களின் ஏற்றத்தாழ்வை வைத்து ஒருவரின் உடல் ஆரோக்கியத்தை கணக்கிட முடியும். உடல் இயக்கத்தினால் ஏற்படக்கூடிய இரசாயன மாற்றங்களால் தான் இந்த ஒளிக்கசிவு ஏற்படுகிறது. இவ்வாறு ஹிட்டோஷி கூறினார். (ஓ-6)

## சீனாவில் நிலச்சரிவுக்கு 66 பேர் பலி

(பீஜிங்)

சீனாவில் சிச்சுவான், குவாங்ஷி, ஹூனான் ஜியாங்ஷி ஆகிய மாநிலங்களில் பலத்த மழை பெய்தது. இதனால் பலத்த வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இதன் காரணமாக ஆயிரக்கணக்கானவர்கள் தங்கள் வீடுகளில் இருந்து பாதுகாப்பான இடங்களுக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டனர். இந்த நிலையில் பல்வேறு இடங்களில் ஏற்பட்ட நிலச்சரிவில் 66 பேர் பலியானார்கள். (ஓ-6)

## சகாரா பாலைவனம்
# பரவுவதைத் தடுக்க 6 ஆயிரம் கி.மீ நீள தடுப்புச் சுவர் கட்டுவதற்கு யோசனை

(லண்டன்)

சகாரா பாலைவனம் பரவி வருவதை தடுக்க 6 ஆயிரம் கிலோ மீற்றர் நீளமுள்ள தடுப்பு சுவர் அமைக்க வேண்டும் என கட்டட வல்லுனர் மேக்னஸ் லார்சன் தெரிவித்துள்ளார்.

உலகின் மிகப்பெரிய பாலைவனமான சகாரா மேலும் பல பகுதிகளுக்கு பரவுகிறது. இதனால் 200 கோடி மக்கள் பாதிக்கப்படுவர் என ஐ.நா. எச்சரித்திருந்தது.

ஐ.நாவின் இந்த கவலையை போக்க வேண்டுமானால், சகாரா பாலைவனத்தை சுற்றி 6 ஆயிரம் கிலோ மீற்றர் நீளத்துக்கு தடுப்பு சுவர் அமைக்க வேண்டும் என பிரபல கட்டட வல்லுனர் மேக்னஸ் லார்சன் ஒக்ஸ்போர்ட்டில் நடந்த மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேக்னஸ் லார்சன் கூறியதாவது,

மேற்கு ஆபிரிக்காவில் உள்ள மவுரிட்டானியாவிலிருந்து கிழக்கு ஆபிரிக்காவில் உள்ள டிஜிபவுட்டி வரை இந்த தடுப்பு சுவர் அமைக்கப்பட வேண்டும். ஏழை நாடுகள் ஏராளமான பொருட் செலவில் இந்த தடுப்பு சுவரை கட்ட முடியாது.

எனவே பாலைவனத்தில் உள்ள மணல் குன்றுகளை கல் குன்றாக மாற்றி விடலாம். சதுப்பு நில பகுதிகளில் "பாசில்லஸ் பாஸ்டூரி" என்ற பாக்டீரியாக்கள் உள்ளன. இந்த பாக்டீரியாக்கள் மணலை கல்லாக இறுக செய்ய வல்லவை. இந்த பாக்டீரியாக்களை மணல் குன்றில் கலக்க செய்து விட்டால் மணல் குன்றுகள் கல்லாக மாறி இயற்கையாகவே பாலை வனத்தின் தடுப்பு அரணாக மாறி விடும்.

வடக்கு ஆப்ரிக்காவில் உள்ள ஒரு சில நாடுகள், பாலைவனம் பரவாமல் தடுக்க மரங்களை நட்டு பராமரித்து வருகின்றன. சீனாவில் உள்ள கோபி பாலைவனத்திலும் இந்த மரம் நடும் திட்டம் உள்ளது. இவ்வாறு மேக்னஸ் லார்சன் கூறினார். (ஓ-6)

## நைஜீரியாவில்
# பள்ளிவாசல் மீது தாக்குதல்; 43 போராளிகள் பலி

(நைஜீரியா)

நைஜீரியாவில் இஸ்லாமிய போராளிகள் மறைந்துள்ளதாக நம்பப்படும் பள்ளிவா[illegible] ஒன்றின் மீது அந்நாட்டு படையினர் புதன்கிழமை இரவு மேற்கொண்ட தாக்குதலில், 43 போராளிகள் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வட நகரான மெய்துகுரியில் உக்கிர துப்பாக்கிச் சமர் இடம்பெற்று மூன்று நாட்களின் பின் இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

'போகோ ஹராம்' என்ற மேற்படி போராளி குழுவானது நைஜீரிய அரசாங்கத்தை ஆட்சி கவிழ்த்து, கடுமையான இஸ்லாமிய சட்டங்களை நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளது.



கடந்த 4 நாட்களாக நைஜீரியாவில் இடம் பெற்று வரும் மோதல்களில் உயிரிழந்தவர்கள் தொகை 300 பேராக உயர்ந்துள்ளது.

படையினரின் குண்டுத் தாக்குதலில் 'போகோ ஹராம்' போராளி குழுவின் பிரதித் தலைவர் பலியாகியுள்ளதாக இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சாலெஹ் மெய்னா தெரிவித்தார்.

எனினும் அப்போராளி குழுவின் தலைவர் மொஹமட் யூஸுப், தனது ஆதரவாளர்கள் சுமார் 300 பேருடன் தப்பிச் சென்றுள்ளதாக அவர் கூறினார். (ஓ-6)

# மியன்மார் மீது மீண்டும் பொருளாதாரத் தடை
## அமெரிக்கா அறிவிப்பு

(வோஷிங்டன்)

மியான்மார் நாட்டில் இராணுவ ஆட்சி நடந்து வருகிறத். அங்கு ஜனநாயக ஆட்சியை கொண்டு வருவதற்காக போராட்டம் நடத்தி வருகிறார். இதனால் அந்த நாட்டு அரசு அவரை வீட்டுக்காவலில் அடைத்து வைத்தது. மிக நீண்டகாலத்துக்கு வீட்டுக்காவலில் இருக்கும் தலைவர் இவராக தான் இருக்க வேண்டும்.

இவரை விடுதலை செய்ய வேண்டும் என்று உலக நாடுகள் கேட்டுக் கொண்ட போதிலும், ஐ.நா. சபை தீர்மானம் நிறைவேற்றிய போதிலும் அதை அந்த நாட்டு ஆட்சியாளர்கள் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை.

இந்த நிலையில் அவரை விடுதலை செய்ய வேண்டும் என்று அமெரிக்க பாராளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வரப்பட இருக்கிறது.

இதற்கிடையில் அந்த நாட்டின் மீதான பொருளாதார தடையை அமெரிக்கா புதுப்பித்து உள்ளது. அந்த நாட்டின் மீது கடந்த 2003 ஆம் ஆண்டு முதன் முதலாக தடை கொண்டுவரப்பட்டது. (ஓ-6)

# தீவிரமாக உடற்பயிற்சி செய்தால் புற்றுநோய் வராமல் தடுக்க முடியும்
## ஆய்வில் தகவல்

ஆண்கள் தினமும் கடினமாக உடற்பயிற்சி செய்தால் புற்றுநோய் வராமல் தடுக்க முடியும் என்று ஆராய்ச்சி அறிஞர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

பின்லாந்து நாட்டில் உள்ள பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்கள் நடத்திய ஆராய்ச்சியில் இதைக் கண்டுபிடித்து இருக்கிறார்கள். எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாக ஒட்சிசனை நாம் உட்கொள்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு புற்றுநோய் அபாயம் குறைகிறது என்று அவர்கள் தெரிவித்தார்கள்.

இது தொடர்பாக அவர்கள் 42 வயதுக்கு மேற்பட்ட, 61 வயதுக்கு உட்பட்ட 2 ஆயிரத்து 560 பேரிடம் 12 மாதங்கள் நடத்தப்பட்ட ஆய்வில் இந்த விபரம் தெரியவந்துள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

தினமும் 30 நிமிடம் உடற்பயிற்சி செய்பவர்களை இந்த நோய் அதிகம் தாக்குவதில்லை. உடற்பயிற்சியே செய்யாதவர்களை விட செய்பவர்களுக்கு புற்று நோய் அபாயம் 50 சதவீதம் தான் உள்ளது என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர். (ஓ-6)

# முகாம்களில் உள்ள தமிழர்களை 6 மாதங்களுக்கு மீளக் குடியமர்த்த இலங்கை அரசு இணக்கம்

## இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா தெரிவிப்பு

(கொழும்பு)

முகாம்களில் இருக்கும் தமிழர்கள் 6 மாதங்களுக்குள் அவர்களது சொந்த இடங்க ளில் மீள்குடியமர்த்தப்படுவார்கள் என இலங்கை அரசு உறுதி அளித்துள்ளதாக இந் திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு குறித்து இரண்டு நாட்களாக பாராளுமன்றத்தில் இடம் பெற்ற விவாதத்துக்கு பதிலளித்து பேசுகையிலேயே அவர் நேற்று முன்தினம் இவ்வாறு கூறியுள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதா வது, இலங்கை தமிழர்களின் மறுவாழ்வுக்கு 500 கோடி ரூபா வழங்குவதாக இந்தியா ஏற்கனவே கூறியுள்ளது.

இன்னும் என்னென்ன உதவி தேவைப் பட்டாலும் அளிப்ப தாக சமீபத்தில் எகிப்தில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடம் பிரதமர் மன்மோகன்சிங் உறுதி அளித்துள்ளார் என்றார். (ஓ-6)

# கையடக்கத் தொலைபேசியை பறித்த தாயை தாக்கிய மகள்

## தாயார் வைத்தியசாலையில் அனுமதி

(கொழும்பு)

தனது மகளின் கையடக்கத் தொலை பேசி யைப் பறித்தெடுத்ததால் கோபமடைந்த மகள் தனது தாயின் நெஞ்சில் காலால் உதைத்ததால் தாய் தற்போது சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

12 வயது மகள் ஒருவரே இவ்வாறு தனது தாயை காலால் உதைத்துள்ளார்.

சிலாபம் பிரதேசத்தில் இடம்பெற்ற இச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

குறித்த மாணவியின் தந்தை வெளிநாட்டில் தொழில் புரிந்து வருகின்றார்.

சிலாபத்திலுள்ள பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் தனது மகளுக்கு அவர் கைய டக்கத் தொலைபேசி ஒன்றை பெற்றுக் கொடுத்துள்ளார்.

இதனையடுத்து, அம்மாணவி சதா எந் நேர மும் அக்கையடக்கத் தொலைபேசியு டனேயே காலத்தைக் கழித்து வந்துள்ளார்.

அதில் விளையாட்டில் ஈடுபடுவதால் அவளது கல்வி நடவடிக்கைகள் பாதிப்படைவதைக் கண்ட தாய் அந்த தொலைபேசியை பறித் தெடுத்துள்ளார்.

இதனால் கோபமடைந்த அம் மாணவி தனது காலால் தாயின் நெஞ்சில் உதைத் துள்ளார்.


இதனையடுத்து தாய் சிலாபம் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஓ-6)

# நிவாரணக்கிராமங்களில் தடுப்பூசி ஏற்றத்தீர்மானம்

வவுனியா நிவாரணக் கிராமங்களில் வாழும் சிறுவர்களுக்கு சின்னமுத்து மற்றும் இளம் பிள்ளை வாதம் ஆகிய நோய்களுக் கான தடுப்பூசிகளை ஏற்றுவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.


இதற்கான விசேட செயற்றிட்டம் ஒன்றை தயாரித்துள்ளதாக பொதுச் சுகாதார பிரதிப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மகிபால தெரிவித்தார். நிவாரணக்கிராமங்களில் வாழும் 5 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு இந்த தடுப்பூசிகள் ஏற்றப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். இதனைத் தவிர அவர்களுக்கு விற்றமின் A வில்லைகளை வழங்கவும் சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பாலித மகிபால மேலும் கூறினார். (ஓ-4)

# இன்னமும் உன்நினைவை ஏந்தியே ....



## சகாதேவன் நிலக்ஷன் (நிலா)

மலர்வு - 08.11.1985



மறைப்பு - 01.08.2007

ஓரிரண் டாண்டுகள் ஓடியே போனதுவோ?
நீர்திரண்ட விழிகளில் ஈரம் தொடர்கிறதே।
யாரிருந் தாற்றுவார்? எம்துயர் மாற்றுவார்?
வேரிழந்த விருட்சமாய் விதிவழியில் சுழல்கின்றோம்.
நெஞ்சமெல்லா மினிக்கும் "நிலக்ஷன்" உன்பெயரைத்
தஞ்சமென நினைத்தோர்க்குத் தாளாத பேரிடியை
வஞ்சகமாய்த் தந்தவர்கள் வாழ்ந்திடவா முடியும்?
கொஞ்சும் கிளியுயிரைக் கொள்ளை கொண்டவர்க்கு
அஞ்சே லென்று அறம்அபயம் அளித்திடுமா?
அரும்பு மலராகி அமுதமணம் வீசுமுன்னர்
இரும்பு மனத்தருனை இல்லா தொழித்தனரே।
பெற்றவர் நெஞ்சில் பெருந்தீ மூளவும்
உனைப்பிரிந்த உடன்பிறப்பு உனைநினைந்து ஏங்கவும்
சுற்றமும் நண்பரும் சோகச்சுமை தாங்கவும்
நற்றுணை நீயின்றி நாமிருந்து அழுகின்றோம்.
இருபத்து இரண்டு அகவைநீ கொண்டிருந்தும்
இளமை வளமையுடன் இன்முகம் கண்டிருந்தும்
பருவத்தே நல்லறிவு பக்குவம் சேர்ந்திருந்தும்
பாவிநாம் உனையிழந்து பரிதவிக்கும் நிலைகண்டோம்
எண்ணங்கள் மறைந்திடுமோ? எழில்முகம் மறந்திடுமோ?
வண்ணங்கள் பலகொண்ட வள்ளலுனை மறப்போமோ
இன்னமுத வெண்ணிலாவுன் இனியசொல் கேட்காது
இன்னமும் உன்நினைவை ஏந்தியே கிடக்கின்றோம்.

அப்பா, அம்மா, அண்ணா.

47, புகையிரத நிலைய வீதி,
கொக்குவில்.

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச்சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

103



ஒபாமாவும் கென்ய உறவினர்களும்

புகைவண்டி கிசுமுவை அதிகாலையில் அடைந்ததும் அதில் இருந்து அரை மைல் தூரத்திற்கு நடந்து சென்று பஸ் தரிப்பு நிலையத்தை அடைந்தனர். பல பஸ் வண்டிகள் தரித்து நின்றன. ஒபாமா நின்ற இடத்தை நோக்கி வந்த பஸ்ஸில் ஔமா ஏறினாள்.

ஆனால் உடனே இறங்கிவிட்டாள். அதில் போதிய இட வசதி இல்லையே என்று அங்கலாய்த்து நின்ற அவளை றோய் தேற்றினார். அது ஆபிரிக்கா. ஔமா நினைப்பது போல ஐரோப்பா அல்ல. கண்டக்பரிடம் ஏதோ தனியே பேசி இடவசதி பெற ஆவன செய்தார் றோய். கண்டக்டர் தனது பஸ் முதலாம் வகுப்பைச் சேர்ந்தது என்று வேறு புகழ்ந்தான்.

ஆகவே எல்லோரும் ஏறியதும் பஸ் புறப்பட்டது. ஒரு மணித்தியாலப் பயணத்தின் பின் ஔமா ஒபாமாவின் மடியிலும் அவள் மடியில் யாரோ ஒருவரின் குழந்தையும் அருகில் மரவள்ளிக்கிழங்குப் பெட்டிகள் என்று அவலத்தை அனுபவித்தனர். முதலாம் வகுப்பு வண்டியின் தரமே இதுவாயின், மூன்றாம் வகுப்பின் கதி எப்படி இருக்கும் என்று ஏங்கி நின்ற ஒபாமா, யன்னலின் வழியாக கென்யாவின் மலைப்பகுதியைக் கண்டு களித்தார்.

எங்கும் வறண்ட பூமி . பஸ் என்போரின் என்ற இடத்தை அடைந்ததும் பயணிகள் இறங்கி குளிரான சோடாக்களை வாங்கி களைப்பை நீக்கிய பின் இரண்டு மணித்தியாலங்கள் காத்து நின்றனர். அப்போது அங்கே வந்த வேறு ஒரு பஸ்ஸில் வடக்கு நோக்கி புறப்பட்டனர். குண்டும் குழியும் நிறைந்த அசுத்தமான ஆனால் அகலமான பெரும் தெருவில் பஸ் வண்டி ஓடி ஒரு குக்கிராமத்தை வந்தடைந்தது.

ஒரு மர நிழலில் காத்து நின்ற இரு இளைஞர்கள் முகம் மலர்ந்து வரவேற்றனர். றோய் பஸ்ஸில் இருந்து குதித்து தன் இரு கைகளாலும் அவர்களைக் கட்டி அணைத்துத் தழுவினார். பின் அங்கு நின்றவர்களை ஒபாமாவுக்கு அறிமுகம் செய்து வைத்தார் .

ஒருவர் யூசுப் மற்றவர் சாயிப். இருவரும் சிறிய தந்தைமார்கள். சாயித் தங்கள் தந்தையின் கடைசித் தம்பி என்றார்.

அவர்களை பின் தொடர்ந்து ஒற்றையடிப் பாதையில் நடந்து பெரிய வளவுக்குள் புகுந்தனர். சதுர வடிவில் அமைந்த பதிவான கல் வீடு. அதைச் சுற்றிலும் போகன் விலா சிவப்பு ஊதா மஞ்சள் என்று பல நிறங்களில் பூத்துப் பொலிந்து இன்முகம் காட்டி வரவேற்றன. அதுதான்அவர்களின் இரண்டாவது வீடு.

ஹே! ஒபாமா என்று வரவேற்றபடி பெண் ஒருத்தி தலையில் கட்டிய துணி ஒன்றுடன் வீட்டுக்கு வெளியில் வந்தாள். சயித்தின் முகத்தை அவள் முகம் ஒத்திருந்தது. கண்ணில் இருந்து பாய்ந்த ஒலி சிரிப்புடன் கலந்து தெறித்தது. ஔமாவையும் றோயையும் கட்டி அணைத்தாள்.

அதன் பின் ஒபாமாவின் பக்கம் திரும்பி ஹலோ என்றவள் ஔமா பக்கம் திரும்பிசுவாகிலியில் கூறியதை ஔமா மொழிபெயர்த்தாள். இந்த நாளுக்காக அவள் ஏங்கிக் கிடந்தாளாம். தனது மகனின் மகனைக் காணும் அந்த நாள் இன்று வந்தது. தனது மகிழ்ச்சி கரைபுரண்டு ஓடுகிறது என்றாள்.

அவள் தலை அசைத்து ஆமோதித்து ஒபாமாவை தன்னோடு அணைத்த வண்ணம் தன் வீட்டுக்குள் கூட்டிச் சென்றாள். அங்கே தளபாடங்கள் மிகவும் குறைவாகவே இருந்தன. சில மரக்கதிரைகள், தேநீர் மேசையொன்று, தேய்ந்து போன படுக்கை இவைதான் தளபாடங்கள் எனலாம். சுவரில் மாட்டி யிருந்த வரலாற்றுச் சின்னங்களை ஒபாமாவின் கண்கள் நோட்டமிட்டன. ஒபாமாவின் தந்தை (கிழவர் பெற்ற) ஹார்வாட் சான்றிதழ்கள், அவரினதும் ஓமரினதும் புகைப்படங்கள் ஆகியன காணப்பட்டன.

ஓமர் தான் பாட்டியின் மகன். அமெரிக்கா சென்றவன் தன் தாயையும் தாய் நாட்டையும் அடியோடு மறந்து மேலைநாட்டு மோகத்தில் தன்னைப் பறி கொடுத்து காணாமல் போய் விட்டான். அவன் போய் இருபது வருடங்கள் ஆகிவிட்டன.

### ஐம்பொன்

இதற்குப் பக்கத்தில் வேறு இரு புகைப் படங்கள் தொங்கின. அதில் ஒன்றில் இளம் பெண் ஒருத்தி. அவளின் கண்கள் பிரகாசமாக இருந்தன. அவளின் வழியில் அழகிய கொழுத்து வளர்ந்த குழந்தையை சுமந்து கொண்டிருந்தாள். அருகில் சிறுமி ஒருத்தி நின்றாள்.

அடுத்த படத்தில் கால் மேல் கால் போட்ட வண்ணம் ஆங்கிலேயச் சீமான் போன்று மனிதன் ஒருவர் கம்பீரமாக அமர்ந்திருந்தார். (தொடரும்)

# நிலவுப் பயணத்தில் மறைக்கப்பட்டதும், மறக்க முடியாததும்

40 ஆண்டுகளுக்கு முன்பு யூலை மாதத்தில் தான் மனிதன் முதன் முதலில் நிலவில் கால்பதித்தான். அமெரிக்காவைச் சேர்ந்த நீல் ஆம்ஸ்ட்டிராங் , ஆல்ட்ரின், கொலின்ஸ் ஆகிய 3 விண்வெளி வீரர்களும் 1969ஆம் ஆண்டு ஜுலை மாதம் 21 ஆம் திகதி நிலவில் இறங்கினார்கள்.

நிலவில் வெற்றிக்கொடி நாட்டிய அந்த சாதனையின் 40-ஆவது ஆண்டு கொண்டாட்டம் கடந்த மாதம் முழுவதும் நடைபெற்றது.

இந்த நிலையில் கிரேய்க் நீல்சன் என்பவர் விண்வெளி பற்றி 'ராக்கெட் மேன்' என்ற தலைப்பில் புத்தகம் எழுதி வெளியிட்டுள்ளார்.

அந்தப் புத்தகத்தில் மனிதனின் நிலவுப் பயணத்தில் மறைக்கப்பட்ட சில விடயங்களையும் ,மறக்க முடியாத சம்பவ மாக விண்வெளி வீரர்கள் கூறியதையும் தொகுத்துக் கூறியுள்ளார். பரபரப்பாக பேசப்படும் அந்த சுவாரசியமான விஷயங்கள் இதோ ;

### திட்டமிட்டபடி இறங்காத விண்கலம்

☼ விண்வெளி வீரர்கள் சென்ற அப்பலோ 11 விண்கலம் நிலவுக்கு சிறிது தூரத்தில் சென்ற போது சிறு பிரச்சினை ஏற்பட்டு விட்டது. இதனால் திட்டமிட்ட இடத்தில் இறங்க முடியாமல் போனது. $3^1/2$ மைல் தொலைவுக்கு அப்பால் சென்று இறங்கியது.

☼ அப்போது விண்கலத்தில் பயன்படுத்திய கணனி தற்போது இருக்கும் செல்போன் அளவு வேகம் கூட இருக்கவில்லை.

☼ குடிக்க தண்ணீர் கூட இல்லாமல் சிரமப்பட வேண்டியதாக இருந்தது. ஏனெனில் எரிபொருளுடன் சம்பந்தப்பட்டு வடிகட்டியே பெறப்பட வேண்டியதாக ஏற்பாடு செய்யப்பட்டு இருந்ததால் இந்த ஏமாற்றம் நிகழ்ந்தது.


அதேபோல் மலசலத்தை கழிப்பது போன்றவற்றுக்கும் மிகுந்த சிரமப் பட வேண்டியதாக இருந்தது. இதனால் மலசலத்தை நிறுத்தி வைப்பதற்காக விண்வெளி வீரர்கள் மருந்து சாப்பிடும் நிலைக்கு ஆளாகினர்.

☼ அதேபோல் பெரிய விண்கலத்தில் இருந்து ஈகிள் எனப்படும் குட்டி விமானம் மூலம் நிலவில் தரை இறங்கினார்கள். ஈகிளிலும் பிரச்சினை ஏற்பட்டதால் 4 மைல் தூரத்துக்கு அப்பால்தான் தரை இறங்க முடிந்தது.

☼ நீல் ஆம்ஸ்டிராங் ஈகிள் மூலம் நிலவில் இறங்கும் போது அது ஏறக்குறைய எரிபொருள் தீர்ந்து நிலவின் தரையில் மோதுவது போல் சென்றது.

☼ நிலவில் காலடி வைத்ததை மனிதனின் சிறிய அடி என்று பெருமையுடன் குறிப்பிடுகிறார்கள். ஆனால் அது சிறிய அடியாக இருக்கவில்லை. அவர் ஈகிளின் ஏணிப்படியிலிருந்து 3.5 அடி தாவித்தான் நிலவில் கால் வைத்தார்.

☼ ஆம்ஸ்டிராங்கைத் தொடர்ந்து ஆல்ட்ரின் இறங்கினார்.



அப்போது ஈகிள் விண்கலத் தின் கதவைப் பூட்ட முடியாமல் சிரமப்பட்டார். ஏனெனில் அதை வெளியில் இருந்து பூட்டும் வகையில் வடிவமைக்கப்படவில்லை.

### கொடியை நடுவதில் சிரமம்

☼ நிலவில் இறங்கும் முன்பு நடந்திருந்த ஆய்வுப்படி நிலவின் மணல் மிருதுவாக இருக்கும் என்று நம்பப்பட்டது. ஆனால் நிலவில் இறங்கிய பிறகுதான் கடினமாக இருந்தது தெரியவந்தது. மனிதன் இறங்கிய இடம் முழுவதும் பாறையாக இருந்தது. இதனால் கொடியை நடுவதற்கு மிகுந்த சிரமப்பட்டார்கள்.

☼ நிலவில் நட்ட அமெரிக்கக் கொடி விறைப்பானதாக இருந்தது. ஆனால் அதை நாசா நிறுவனம் மறுத்துவிட்டது.

☼ விண்வெளி ஆடை, அங்குள்ள சூழலுக்கு ஏற்ற கணனி சிப் அனைத்தும் ''லிட்டில் ஓல்ட் லேடிஸ்'' என அழைக்கப்படும் குழுவினரால் கையால் உருவாக்கப்பட்டிருந்தது.


இந்த விடயங்கள் அனைத்தையும் நாசாவின் கருவூலத்தில் இருந்து சேகரித்து தொகுத்துள்ளார்.

நிலவில் இறங்கிய விண்வெளி வீரர்கள் நிலவுக்கு செல்லும் முன் தாங்கள் உயிருடன் திரும்புவது சந்தேகம் என்ற நிலையிலேயே பயணத்தைத் தொடங்கினர். இதற்காக தங்கள் உயிருக்கு இன்சூரன்ஸ் செய்ய முயன்றபோது எந்த நிறுவனமும் அதற்குப் பொறுப்பு ஏற்கவில்லை.

இதனால் தங்களின் நினைவுச் சின்னங்களாக சில பொருட்கள் ஓவியங்களை குடும்பத்தினரிடம் ஒப்படைத்துவிட்டே விண்வெளி வீரர்கள் பயணத்தை தொடங்கினர். இந்த விடயங்கள் ஏற்கனவே விண்வெளி வீரர்களால் வெளிப்படுத்தப்பட்டு பல நூல்களில் இடம்பெற்றிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு மூலம் சிகிச்சை

விளையாட்டு என்பது சிறந்த பலன்களைத் தரும் ஒரு வகை உடற்பயிற்சி என்றும் கூறலாம்.



சில விளையாட்டுகள் விளையாடுவதால் உடல் வலியைத் தரலாம். ஆனாலும் உடல் பலம் பெறும். சுறுசுறுப்பைக் கொண்டு வரும்.

தற்போது சில மூட்டு வலிகளை விளையாட்டுப் பயிற்சி மூலமே குணப்படுத்த முடியும் என்று ஒரு ஆய்வில் தெரிய வந்துள்ளது.

மக்கள் தொகையில் 3சத வீதம் பேர் தோள்பட்டை வலியினால் அவதிப்படுகிறார்கள். இது குறித்து நியூயோர்க் நிக் கோலஸ் இன்ஸ்டிடியூட்டைசேர்ந்த டிமோதி எப். ரெய்லர் என்பவர் தலைமையில் ஆய்வுநடந்தது. தோள்பட்டை வலி உடைய நோயாளிகள் 21 பேரை இருபிரிவாக பிரித்து ஆய்வு செய்தனர்.

ஒரு பிரிவினருக்கு மசாஜ் ஐஸ் ஒத்தடம்,கைகளுக்கு வலுவூட்டுதல் போன்ற பல பயிற்சிகள் அளிக்கப்பட்டன. மற்றொரு பிரிவினருக்கு டென்னிஸ் எல்போ பாதிப்புக்கு உடற்பயிற்சி முறையில் சிகிச்சை அளித்தனர். இதற்காக விசேஷமாக தயாரிக்கப்பட்ட ரப்பர் பார் மூலம் தேகப்பயிற்சி போல சில பயிற்சிகள் செய்ய வைத்தனர். தினமும் 3 செட் வீதம் 15 முறை பயிற்சி அளிக்கப்பட்டது.

இறுதியில் இந்த சிகிச்சை பெற்றவர்கள் நல்ல நிவாரணம் அடைந்தனர் . ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட 21 பேர் உட்பட 30 பேர் இந்தப் பயிற்சி மூலம் குணமானதாக ஆய்வாளர் தெரிவித்தார்.

டென்னிஸ் எல்போ பாதிப்புக்கு இந்த சிகிச்சை நல்ல பலன் தருகிறது. இது பல சிறப்பம்சங்கள் கொண்டது.பக்க விளைவுகள் கிடையாது .

டோஸ் கணக்கில் மருந்து கிடையாது. கிளினிக்கிற்கு செல்ல வேண்டிய அவசியம் கிடையாது என்று பெருமையுடன் கூறுகிறார் ஆய்வாளர் ரெய்லர்.





# வவ்வால் ரோபோ

மனிதனால் நேரடியாக செயய முடியாத பல செயல்களில் செயற்கை மனிதனான ரோபோக்கள் ஈடுபடுத்தப்படுகின்றன. குறிப்பாக விபத்துக்காலங்களில் குட்டி ரக விமானங்கள் ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தப் படுகின்றன. அந்த நேரங்களில் அவற்றின் பயன் முழு அளவில் இல்லாததால் இதற்கு மாற்றுவழிகள் தேடப்பட்டன.

இதை நிறைவேற்றும் பொருட்டு வவ்வால் ரோபோ வடிவமைக்கப்பட்டு உள்ளது. இது ஆபத்துக்காலங்களில் புலன் விசாரணைக்கும் மற்றும் சில முக்கிய வேலைகளுக்கும் பயன்படும் என்று தெரிகிறது.

இந்த வவ்வால்ரோபோக்கள் 6 கிராம் எடையே உள்ளன. மைக்ரோ ஏரியல் வெகிகிள் எனப்படும் சிறியதகவல் ஒலிபரப்பு சாதனமும் சென்சாரும் இடம் பெற்று இருக்கும். இதன் பாகங்கள் உயர்தர உலோகத்தால் ஆனவை . மெல்லிய நரம்புகளும் உள்ளன. அனைத்து பாகங்களும் நெகிழும் தன்மை கொண்ட எலாஸ்டிக்கால் இணைக்கப்பட்டு இருக்கும் . இறக்கைகள் எந்தப் பக்கமும் திரும்பும் வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கும்.

மிகச் சிறிய விமானம் போன்றே செயற்படும் . இது காற்றில் ஏற்படும் அழுத்தம் வெப்ப மாற்றம் மின்பாதிப்புக்களைக் தாங்கும் திறனுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் ஏற்படும் வெப்பமாற்றங்களைக் கண்டு பிடிக்க சிறிய மயிர்கால் அளவுள்ள அளவு கோல்



உள்ளது. எங்கு வேண்டுமானாலும் எடுத்துச் செல்லும் வகையில் இருக்கும் . ரிமோட் மூலம் இயக்க முடியும்.

இத்தகைய சிறப்பு வசதிகளைப் பெற்றிருப்பதால் இந்த வௌவால் ரோபோ எதிர் காலத்தில் பல்வேறு பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளது. குறிப்பாக இயற்கை நிகழ்வுகளை வெகுஅருகில் சென்று படம் பிடிப்பது உள்ளிட்ட அநேக தகவல் பரிமாற்றங்களுக்கு பெரிதும் பயன்படும் என்கிறார்கள் ஆய்வாளர் கள்.

வடக்கு கரோலினா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இதை வடிவமைத்து இருக்கிறார்கள். வருகிற செப்டெம்பர்மாதம் நடைபெறவுள்ள மெக்கானிக்கல் என்ஜினியர் மாநாட்டில் இந்த ரோபோ அறிமுகப் படுத்தப் படவுள்ளது.

# வயது வந்தவர்களுக்கான திரைப்படங்களின் தடை

## — உள்ளூர் திரைப்படத்துறையைப் பாதிக்கும் —

### மங்கள சமரவீர எம்.பி.தெரிவிப்பு



வயது வந்தவர்களுக்கான திரைப்படங்களை தடைசெய்வதென்பது உள்ளூர் திரைப்படத் துறையை பாதிப்படையச் செய்வதோடு இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், கலைஞர்களை நெருக்கடிக்குள் தள்ளி விடும். ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியாளர்களைப் போன்று இங்கும் அனைத்து விதத்திலும் அரசாங்கம் அடிப்படைவாத அடக்குமுறையை முன்னெடுக்கின்றதுஎன்று மங்கள சமரவீர எம்.பி. தெரிவித்தார்.

ராஜகிரியவில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் மாநாட்டில் உரையாற்றும் போது சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவரும், எம்.பி.யுமான மங்கள சமரவீர இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், உலகிலேயே எங்கும் இல்லாதவாறு வயது வந்தோருக்கான திரைப்படங்களை அரசாங்கம் தடைசெய்யவுள்ளது.

இதற்கான அங்கீகாரம் அமைச்சரவைக் கூட்டத்தின்போது பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாக கலாசார அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதன் பின்னணியில் அண்மையில் இவ் அமைச்சரது அமைச்சை கரம்பிடித்தவரே காரணமாவார்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்களைப் போன்று இலங்கையிலும் அடிப்படைவாத அடக்குமுறை ஆட்சியை முன்னெடுக்க இவர்கள் முயல்கிறார்கள்.

இதனால் எமது உள்ளூர் திரைப் படத்துறை பாதிக்கப்படும். இவ்வாறான திரைப்படங்களுக்கு வயது வரம்பு விதிக்கப்பட்டுள்ளது.

வாழ்க்கையில் ஏற்படும் விவாத மிக்க நெருக்கடிகள் இவ்வாறான திரைப்படங்கள் ஊடாக வெளிப் படுத்தப்படுகின்றன.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில காட்சிகள் இணைக்கப்படு கின்றன. மிக மோசமான காட்சிகள் உள்ளடக்கப்பட்டிருக்குமானால் அதனை நீக்கிவிடுவதற்காகவே அரங்காட்டற் கலை நிறுவகம் உள்ளது.

இவ்வாறான அடிப்படைவாதம் கடுமையான முறையில் முன்னெடுக்கப்பட்டால் எதிர்காலத்தில் கிகிரியாவிலும் ஆபாசக்காட்சிகள் இருப்பதாக குற்றம்சுமத்தி அதனையும் டைனமைற் வைத்து அழித்து விடுவார்கள். (ஓ-6)

# தமிழக அரசு வழங்கிய நிவாரண பொருட்கள் சென்னையில் தேக்கம்

(சென்னை)

இலங்கை தமிழர்களுக்காக தமிழக அரசு வழங்கியுள்ள 12 கோடி ரூபாய் மதிப்புள்ள நிவாரணப் பொருட்கள் கடந்த 15 நாட்களாக சென்னை துறைமுகத்தில் தேங்கிக் கிடக்கின்றன.

இலங்கையில் போரில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்காக தமிழக அரசு மூன்று முறை 30 கோடிக்கும் அதிகமான நிவாரணப் பொருட்களை இலங்கைக்கு அனுப்பி வைத்தது. நான்காவது முறையாக 12 கோடி ரூபாய் மதிப்பிலான நிவாரணப் பொருட்கள் 100 கொள்கலன்களில் ஏற்றப்பட்டு இலங்கைக்கு அனுப்புவதற்காக கடந்த 12 ஆம் திகதி சென்னை துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தன.

இதில் 80 ஆயிரம் குடும்பங்களுக்கு தேவையான லுங்கி, சேலை, போர்வை உள்ளிட்ட பொருட்களும், பால்மா, அரிசி பருப்பு உள்ளிட்ட உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துப் பொருட்கள் உள்ளன.

கடந்த 15 ஆம் திகதி சென்னை துறைமுகம் வந்து சேர்ந்த இந்த பொருட்கள் 17 ஆம் திகதி கப்பல் மூலம் இலங்கைக்கு சென்றிருக்க வேண்டும். ஆனால் கடந்த 15 நாட்களாக இலங்கைக்கு அனுப்பி வைக்காமல் சென்னை முறைமுகத்தில் தேங்கிக் கிடக்கின்றன.

இதுகுறித்து துறைமுக அதிகாரிகள் கூறுகையில் "தமிழக அரசு சார்பில் இலங்கைக்கு அனுப்பப் படும் நிவாரணப் பொருட்கள் குறித்த பட்டியல் இலங்கையில் உள்ள இந்திய தூதரகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசின் முறையான அனுமதி பெற்ற பின் தான் பொருட்களை அனுப்பி வைக்க முடியும் ஒப்புதல் அளிக்க இலங்கை அரசு தயக்கம் காட்டி வருவதால் தான் நிவாரணப் பொருட்களை அனுப்ப முடியவில்லை என்றனர்.

ஐரோப்பிய தமிழர்களால் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் நீண்ட இழுபறிக்கு பின் கொலராடோ கப்பல் மூலம் சென்னை துறைமுகத்தில் இருந்து இந்த மாதம் முற்பகுதியில் அனுப்பி வைக்கப்பட்டன. அந்தப் பொருட்களும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு சென்றடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# மக்களின் மீள்குடியேற்றத்திற்கு கடன் நிதி பயன்படுத்தப்படும்

### அமைச்சர் சமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச நாணயத் நிதியத்திடம் இருந்து கிடைக்கப்பெற்றுள்ள நிதியுதவி, இடம்பெயர்ந்துள்ள மக்களை மீள்குடியேற்றும் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை கொடுத்து பயன்படுத்தப்படும். தற்போதைய நிலைமையில் அதுவே முதல்தர தேவையாக உள்ளது என்று இடர் முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து இலங்கை பெற்றுக் கொண்டுள்ள நிதியை இடம் பெயர்ந் துள்ள மக்களை மீளக்குடியமர்த்த பயன்படுத்த வேண்டும் என்று அண்மையில் பிரான்ஸ் நாட்டின் வெளிவிவகார அமைச்சர் தெரிவித் திருந்தமை குறித்து கருத்து வெளி யிடுகையிலேயே அமைச்சர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அமைச்ச் இவ்விடயம் தொடர்பில் மேலும் கூறியதாவது, சர்வ தேச நாணய நிதியத்திடம் இருந்து 2.6 பில்லியன் டொலர் நிதியுதவி இலங்கைக்கு கிடைத்துள்ளது. இது மிகப் பெரிய உதவித் தொகை யாகும். இந்த நிதியை குறிப்பிட்ட துறைக்குத்தான் பயன்படுத்த வேண்டும் என்று எந்த விதமான நிபந்தனைகளும் விதிக்கப் படவில்லை.

இந்நிலையில் இந்த நிதி நாட்டின் முதற்மை விடயங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு ஒதுக்கப்படும். அந்தவகையில் தற்போதைய நாட்டின் முதன்மை நடவடிக்கையாக கருத்தப்படுவது இடமபெயர்ந்துள்ள மக்களை மீளக்குடியமர்த்துவதாகும். அதற்காக பல்வேறு வேலைத் திட்டங்களை அரசாங்கம் மேற் கொண்டுவருகின்றது. எனவே சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கிடைத்துள்ள நிதி உதவியை அகதிமக்களை மீளக்குடிய மர்த்தும் வேலைத் திட்டத்திற்கு பயன்படுத்த வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும். அரசாங்கமும் அவ்விடயத்தில் கவனம் செலுத்தவுள்ளதுஇது எனது தனிப்பட்ட கருத்தாகக்கூட இருக்கலாம்.

ஆனால் அரசாங்கம் அவ்வாறு தான் நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்தார். (ஓ-6)

# நாமல் ராஜபக்ஷவை களமிறக்கும் எண்ணமில்லை


### அமைச்சர் யாப்பா தெரிவிப்பு

தென்மாகாண சபைத்தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக ஜனாதிபதியின் மகன் நாமல் ராஜபக்ஷவை களமிறக்கும் எண்ணம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இல்லை. அவ்வாறான கருத்தை அவர் வெளியிடவுமில்லை என்று ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

ஊடகத்துறை அமைச்சில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அமைச்சர் தொடர்ந்து கூறுகையில், தென்மாகாணசபை அடுத்த வாரம் கலைக்கப்படும். ஊவா மாகாணத் தேர்தலின் பின்னர் அரசாங்கம் தென்மாகாண சபைத்தேர்தலுக்கு தயாராகி விடும்.

இதேவேளை தென் மாகாண சபைத்தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக ஜனாதிபதியின் மகன் நாமல் ராஜபக்ஷ நியமிக்கப்படுவார் என்று தெரிவிக்கப்படுவதில் உண்மையில்லை. காரணம் நாமல் ராஜபக்ஷவை முதலமைச்சர் வேட் பாளராக நியமிக்கும் எண்ணம் ஜனாதிபதிக்கு இல்லை. அவ்வாறான கருத்து ஒன்றை அவர் முன்வைக்கவில்லை என்று தெரிவித்தார். (ஓ-6)

# நல்லூரான் திருவடிக்கு இன்று 6ஆம் திருவிழா



### வேண்டி நாம் வணங்கிடுவோம்

பச்சைமயில் வாகனனே வள்ளி மணவாளனே
ஆடி ஆடி வலம் வரும் ஏந்தலே கார்த்திகேயனே
கண்குளிர அகங்குளிர
காசினியில் மக்களெல்லாம்
எண்ணுகின்ற வாழ்வு நலம்
சீருடன் பெற்றிடவே
சண்முகா உந்தனது கருணையினை
வேண்டி நாம் வணங்கிடுவோம்.

திருமதி. செ. பாக்கியநாதன், வட்டுக்கோட்டை

### இன்னருளை தாருமப்பா

ஆடும் சேவற் கொடியுடையோனே
அழகுமயில் ஏறி வரும் ஆண்டவனே
தில்லையிலே ஆடும்தேவி பாலகனே – எங்கள்
தொல்லை எல்லாம் போக்கிட நீ வருகவே
நால்வேதப் பொருளான நாதனே
நல்லூரில் வாழும் எங்கள் கந்தனே
இன்பம் எங்கும் பெருகிடவே – உன்
இன்னருளை தாருமப்பா

தென்கோவையூர் - ம.கஜேந்தினி

### யாவரையும் காத்திடுவாய்...

ஆறுபடை வீடுதனில்
அமர்ந்தருளும் சுந்தரனே
நாடு எங்கும்
நகரமெங்கும்
நன்மைகள் விளங்கிடவே
வீறு கொண்டு எழுந்து வந்து
நமக்கருள் புரிந்திடுவாய்

கொற்றையூர் மகே-மேனன்

### தமிழ்த்தாய்ப் புதல்வா அருள் தந்திடுவாய்

சொத்து இழந்து
சுகம் இழந்து – எம்
உறவுகளைப் பிரிந்து
யாருமற்ற அநாதைகளாக
சிறைக்குள் இருந்து
நாம்படும் வேதனை – குமரா!
உனக்கு மட்டுமே தெரியும்
ஆதலால் கையேந்தி நிற்கின்றோம்
நாம் இதுவரையும் பட்ட துன்பங்கள்
எல்லை கடந்து ஓட
வடிவேலா அழகு மயிலேறி வந்து
எம் சொந்தங்களைச் சேர்த்து
சுபீட்சமான வாழ்வு வாழ
கோடி வரம் தந்திட
நல்லைக் கந்தனே – உன்
படியேறி நிற்கின்றோம்.

செல்வி. நி. விஜயசிங்கம்

### நல்லூரான் தாள் பற்றுங்கள்

நல்லை நகருக்கு வாருங்கள்
நாளும் அவன் புகழ் பாடுங்கள்
அல்லல் தீர்ந்திடக் காணுங்கள்
அலங்காரக் கந்தனை நாடுங்கள்
தொல்லைகள் அகலும் தொழுதிடுங்கள்
தொடர்பிணி அறுந்திடும் வேண்டுங்கள்
எல்லையிலா ஈசன் தாள் பற்றுங்கள்
இல்லை இனி பிறவித்துன்பம் என்றிடுங்கள்
உள்ளம் உருக அவனை வேண்டுங்கள்
நல்கும் அவனருளில் நாளும்
மூழ்கியே அல்லும் பகலும்
நல்லூரான்தாள் பற்றுங்கள்
நலங்கள் பலசேர்ந்திட காணுங்கள்
நற்கதியும் நன்னிடவே.

க. நாகேஸ்வரா, சண்டிலிப்பாய்.


அலங்காரக் கந்தனின் அருட்கடாட்சம்
அனைவருக்கும் கிடைக்க
வேண்டுகின்றோம்.
றூபா பன்முக வர்த்தகம்
இல-104A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

9-VII

**விவசாயி செய்த தவறிற்கு ஒரு உதாரணம்.**

**வெட்டும் புழு-நல்ல பூஞ்சணம் - பென்லேற்று**

அநேகமான பயிர்களை தாக்கி சேதத்தை எற்படுத்தும் வெட்டும் புழுவான கெலிக் கோவேப்பா ஆமிஜீரா (Helicoverpa armigera) எனும் அந்துப் பூச்சியின் புழுவை இயற்கையாகவே கட்டுப்படுத்த வல்லமையுள்ள நன்மைதரும் பூஞ்சணமான மெற்றாறைசியம் அனிசோபிளியே (Metarrhizium anisopleae) எமது வேளாண்தொகுதியில் உண்டு.

பூஞ்சண வகை என்பதனால் ஈரப்பதன் 80% க்கு அதிகமாக இருக்கும் போதே இவ்வகை வெட்டும் புழுக்களில் நன்மைதரும் இப் பூஞ்சணங்கள் தொற்று ஏற்படுத்தி அவற்றை கட்டுப்படுத்தும் திறனுள்ளதாக இருக்கும்.

இது வழக்கமான நடைமுறையிலிருக்கும்ஒரு இயற்கையின் செயன்முறை ஆகும். இன்னும் விளக்கினால் குறிப்பிட்ட வேளாண் தொகுதியில் இயற்கைச் சமநிலையை ஏற்படுத்த நடைபெறும் நிகழ்வுகள்.

ஆனால் வெட்டும் புழுவை கட்டுப்படுத்த விவசாயிக்கு அப்போதய நிலையில் கிடைத்தது பூஞ்சண நாசினியான பெனேமில் என வர்த்தக லேபல் குத்தப்பட்ட பென்லேற்று ஆகும்.

சிறந்த வீரியமுள்ள ஊடறுத்து தாக்கும் இப் பூஞ்சண நாசினியை அளவுக்கதிகமாக பயன்படுத்தியதால் தற்போது இதன் விற்பனை சந்தையிலிருந்து நீக்கி விட்டார்கள்.

வெட்டும் புழுவான பூச்சியை கட்டுப்படுத்த பூஞ்சண நாசினி தவறாக தெரிவு செய்யப்பட்டுள்ளதை உங்களால் உணரமுடிகின்றது அல்லவா? இப் பூஞ்சண நாசினியை விசிறியதால் அந்த வேளாண் சூழல் தொகுதியில் இயற்கையின் வரப்பிரசாதமாக இருந்த "நல்ல பூஞ்சணம்" - மெற்றாரைசியம் கட்டுப்படுத்தப்பட்டு விட்டது.

"சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி" என்பது போல "நல்ல பூஞ்சணத்தை" கட்டுப்படுத்தி அடக்கி வைத்ததால் இயற்கைச் சமநிலை குழம்பி வெட்டும் புழுவின் எண்ணிக்கையும் சேதமும் பெருக்கத் தொடங்கி விட்டது.

பிரச்சினை பெரிதாக பெரிதாக வெட்டும் புழுவை கட்டுப்படுத்த இன்னுமொரு பூச்சி




நாசினியை விசிற வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகும் துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டார் விவசாயி. வீணாக பூஞ்சண நாசினியை விசிறி அதனால் மேலுமொரு பூச்சி நாசினியையும் விசிற வேண்டி வந்ததை அவதானித்தீர்களா? இயற்கையை குழப்பி, சீண்டிப்பார்த்தால் விவசாயிக்கு இரட்டிப்பு செலவு!

பீடை நாசினிகளை சரியாக தெரிந்தெடுப்பது எவ்வளவு முக்கியமானது என நீங்கள் விளங்கிக் கொண்டீர்களல்லவா. இதையொத்த இன்னொரு உதாரணத்தைப் பாருங்கள். இது இப்போதும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

**எதற்கோ விசிறப்போய் சேர்த்து இதற்கும் பிடித்த கதை**

பீடைகளின் தாக்கம் பெரிதாக இல்லாத மரக்கறிப் பயிர்களாக கரட், சிறுகீரை, வல்லாரை, பொன்னாங்காணி, முருங்கை, முள்ளங்கி, பீற்றுட், கெக்கரி என இப்படி ஒரு நீண்ட பட்டியலை நாம் காணக்கூடியதாக இருந்தும் விவசாயிகள் சிலரின் தவறான முடிவாலும் செயலாலும் இவற்றுக்கும் சேர்த்து பீடை நாசினிகள் விசிறப்படுகின்றன.

கத்தரிக்கு விசிறிய பூச்சி நாசினியை தேவையற்று சிறு கீரைக்கும் வல்லாரைக்கும் விசிற வேண்டிய தேவை என்ன? இது யாழ்ப்பாணத்து பெரும்பாலான விவசாயிகளிடமுள்ள குறைபாடு. எதற்கோ விசிறப்போய் பீடைத்தாக்கம் என பெரிதாக இனங்காணப்படாத இலைக் கறிவகைகளும் விசிறுவதை என்னவென்பது.

இதுபற்றி விளக்கம் கொடுத்து எங்களூர் விவசாய போதனாசிரியர்கள் களைத்து விட்டார்கள். இந்த சேர்த்து விசிறும் பழக்கத்தினால் அவசியமற்று சிறுகீரையையும் வல்லாரையும் பூச்சி நாசினிகளுடன் சேர்த்து உண்கிறோம்.

இந்த பழக்கத்தை விவசாயிகள் அவசியம் மாற்றிக் கொள்ளவே வேண்டும். நல்ல சிறுகீரை, வல்லாரை, பொன்னாங்காணி என மக்கள் எதிர் பார்



**கலாநிதி கு.மிகுந்தன்**
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

த்து வாங்குவதில் அதிகளவில் தெளித்த அசேதன நஞ்சு இருப்பது எம்மையறியாமலே கொல்லும் செயலல்லவா? எத்தனை செய்திகள், கட் டுரைகள் என விலாவாரியாக அவ்வப்போது உள்ளூர் பத்திரிகைகள் விளக்கியும் இந்த தவறை எம் அன்புக்குரிய விவசாய பெருமக்கள் இனியாவது செய்யக் கூடாது.

இதனால் எமது சந்ததிக்கு மிகப் பெரிய ஆபத்து காத்திருக்கின்றது என்பதனை அறிய இந்த வேளாண் உலகம் என்று தலைப்படுமோ அன்று தான் எமக்கெல்லாம் விடிவுகாலம். பசமைப் புரட்சிக்கொரு வசந்த காலம்.

(தொடரும்)

# காளானிலிருந்து உணவு தயாரிப்பு

காளான் உற்பத்தியை மேற்கொள்வதன் மூலம் வருமானம் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருப்பதனால் தற்போது காளான்களை உற்பத்தி செய்வதில் பலர் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன் காளான்களை உணவாக உட்கொள்வதற்குள் ஆர்வமும் மக்களிடையே அதிகரித்து வருகின்றது. போசணைப் பொருட்கள் நிறைந்த காளான்களிலிருந்து பலவிதமான உணவுப் பண்டங்களை தயாரிக்க முடியும்.

**சமைப்பதற்கு பருவமான காளான்**



**100 கிராம் அறுவடை செய்யப்பட்ட புதிய காளானில் அடங்கியுள்ள போசணைப் பொருட்கள்**

நீர் - 91.0 கிராம், சக்தி - 13 கிலோ கலோரி, புரதம் 2.5 கிராம், கொழுப்பு 0.3 கிராம், கல்சியம் 20 மி.கிராம், இரும்பு 1.மி.கிராம், தயமின் 120 மைக்கிரோ கிராம், றைபோபிளேவின் 500 மைக்கிரோ கிராம், நயாசின் 5.8 மி.கிராம், விற்றமின் C 3.0 மி.கிராம்.

**அறுவடை செய்யப்பட்ட காளான்களில் இருந்து தயாரிக்கக்கூடிய சுவை மிகு உணவுப் பண்டங்கள்.**


## காளான் கறி

**தேவையான பொருட்கள்**

காளான் - 500 கிராம், பெரிய வெங்காயம் - 2, உள்ளி - 4 பல்லு, இஞ்சி - 1துண்டு, மாஜரின் / தேங்காய் எண்ணெய் 3 மே. கரண்டி, முந்திரிகைப்பருப்பு -25, மிளகாய்த் தூள் - 2 மே.கரண்டி, வெட்டிய தக்காளிப் பழம் - 2, முதற் தேங்காய்ப்பால் - 1/2 கப், ரம்பை, கறிவேப்பிலை - 1நெட்டி, வெந்தயம் - 1 தே. கரண்டி, மஞ்சள் தூள் - 1/4 தே. கரண்டி, உப்பு - 5 கிராம்.

**தயாரிக்கும் முறை**

காளானை நன்கு கழுவி சுத்தம் செய்து சிறு துண்டுகளாக வெட்டவும். வெங்காயம், உள்ளி, தக்காளி, இஞ்சி, கறிவேப்பிலை, றம்பை முழுவதையும் வெட்டி வைத்துக் கொள்ளவும். பின்பு பாத்திரத்தை அடுப்பில் வைத்து எண்ணெய்விட்டு காளான், தக்காளி தவிர்ந்த ஏனைய வெட்டிய பொருட்களை



அதற்குள் போட்டு தாளிக்கவும். அவை பொன்னிறமாக வதங்கிய பின் காளான், தக்காளி என்பவற்றைச் சேர்த்து அவற்றுடன் மஞ்சள், மிளகாய்த்தூள், உப்பு யாவையும் சேர்த்து 5 நிமிடம் எண்ணெயில் வதக்கி இறுதியில் தேங்காய் முதற்பாலை கலந்து 10-15நிமிடங்கள் மெல்லிய நெருப்பில் அவியவிடவும் பின் அடுப்பிலிருந்து இறக்கவும். இக்கறி 4-6 பேர்களுக்கு போதுமானது.

குறிப்பு - காளானுடன் அகத்திப்பூ, உருளைக்கிழங்கு, பலாவிதை, என்பவற்றையும் சேர்த்து சமைக்கலாம்.

## காளான் வறை

**தேவையான பொருட்கள்**

காளான் - 100 கிராம், மெல்லிய தேங்காய்த்துருவல் - 1கோப்பை, வெட்டிய பச்சை மிளகாய் - 3, வெட்டிய சின்ன வெங்காயம் - 3 மே.கரண்டி, கொறுக்காய் / எலுமிச்சம்புளி - பாதி, நீர் - 1 டம்ளர், ரம்பை, கறிவேப்பிலை - 1நெட்டி, மாசி அல்லது நெத்தலிக் கருவாடு - 10 கிராம், மஞ்சள் தூள் -1/4 தே.கரண்டி, உப்பு - 5 கிராம்.

**தயாரிக்கும் முறை**

தேங்காய்த்துருவல் தவிர்ந்த ஏனைய பொருட்களை பாத்திரத்தில் இட்டு மெல்லிய நெருப்பில் அவிக்கவும். அவற்றை 2-3 நிமிடம் நீர்வற்றும் வரை விடவும். பின்பு தேங்காய்த் துருவலைக் கலந்து 5 நிமிடம் வறுத்து இறக்கவும். நீர் வற்றும் அளவுக்கு வறுத்தல் வேண்டும். இது 3-5 பேருக்கு போதுமானது.


## காளான் பொரியல்

**தேவையான பொருட்கள்**

காளான் - 250 கிராம், மிளகாய்த்தூள் - 2 மே. கரண்டி, மாஜரின் / தே.எண்ணெய் - 3 மே.கரண்டி, ரம்பை, கறிவேப்பிலை - 1 நெட்டி, உப்பு - 3 கிராம்.

**தயாரிக்கும் முறை**

காளானை துப்புரவாக்கி கழுவி, பிழிந்து மேலதிக நீரை அகற்றவும். அதனை சிறு துண்டுகளாக வெட்டி ஏனைய பொருட்களுடன் சேர்த்து பின் சூடான எண்ணெய்யில் இட்டு ஏனைய பொருட்களுடன் கலந்து பொன்னிறமாகப் பொரித்து எடுக்கவும். இது 4-5 பேருக்கு போதுமானது.



குறிப்பு :- மிளகாய்த்தூளிற்கு பதிலாக மிளகுதூள் பாவிக்கலாம். விரும்பின் தேங்காய்ப்பால் சேர்த்து கறி சமைக்கலாம்.

## காளான் சம்பல்

**தேவையான பொருட்கள்**

காளான் - 500 கிராம், தக்காளிப்பழம் - 2, பெரிய வெங்காயம் - 2, முதல் தேங்காய்ப் பால் - 2 மே.கரண்டி, அரைத்த கடுகு - 2 தே. கரண்டி, மிளகு தூள் - 1 தே.கரண்டி, தேசிச் சாறு - 1 மே.கரண்டி, உப்பு - 5 கிராம்.

**தயாரிக்கும் முறை:-**

காளான்களை நன்கு கழுவி 5 நிமிட நேரம் நீராவியில் அவித்துக் கொள்ளவும். பின்னர் 1அங்குல அளவான துண்டாக அதனை வெட்டிக் கொள்ளவும். ஏனைய பொருட்களான தக்காளி, பெரிய வெங்காயம், அரைத்த கடுகு, மிளகுத்தூள், உப்பு முதல் தேங்காய்ப்பால் என்பவற்றுடன் தேசிச் சாற்றையும் சேர்த்து சம்பல் தயாரித்துக் கொள்ளலாம். இது 6-8 பேருக்கு போதுமானது.

குறிப்பு : நீராவியில் அவித்த காளானை வெட்டி கெக்கரிக் காய், தக்காளி என்பவற்றுடன் சேர்த்து சம்பல் செய்யலாம்.

## காளான் கலந்த மரக்கறி ரொட்டி

**தேவையான பொருட்கள்**

காளான் - 250 கிராம், லீக்ஸ் - 100 கிராம், தக்காளிப்பழம் - 100 கிராம், கோவா - 100 கிராம், உருளைக்கிழங்கு - 100 கிராம், கோதுமை மா - 250 கிராம், அப்பச் சோடா - 1/2 தே.கரண்டி, தே.எண்ணெய் / மாஜரீன் - 2 மே.கரண்டி, மிளகாய்த்தூள் - 1 மே. கரண்டி, உப்பு - 3 கிராம்.

கோதுமை மாவிற்கு உப்பு, அப்பச்சோடா, நீர் என்பவற்றை கலந்து அவற்றை பசை போன்று நன்கு பிசைந்து கொள்ளவும். அதற்கு மாஜரின் அல்லது தே. எண்ணெய் சேர்த்து மீண்டும் பிசைந்து உருண்டைகளாக பிடித்து இரு மணிநேரம் வைக்கவும். காளானைன் நன்கு கழுவி நீராவியில் அவித்து சிறுதுண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். கிழங்கு, தக்காளி தவிர்ந்த ஏனைய பொருட்களையும் சிறு துண்டுகளாக வெட்டி காளானுடன் கலந்து கொள்ளவும். அக்கலவையை

**செல்வி கு. கமலாம்பிகை**
பண்ணைப் பெண்கள் விவசாய விரிவாக்கம்,
பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி) அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

சிறிதளவு எண்ணெயில் வதக்கிக் கொள்ளவும். இறுதியில் அவித்த கிழங்கு, தக்காளி என்பவற்றை சேர்த்தல் வேண்டும். உருண்டையாக தயாரித்த மாவை எண்ணெய் பூசிய தட்டின் மேல் வைத்து வட்டமாக அழுத்தி அதன் மத்தியில் காளான் சேர்ந்த மரக்கறி கலவையை வைத்து விரும்பிய வடிவத்தில் மடித்து அதனை சூடான தோசைக்கல்லின் மேல் வேக வைத்து எடுக்கவும். சுவையான காளான் மரக்கறி ரொட்டி தயாரானதும் பரிமாறலாம்.

(தொடரும்)



மா.வி.ப நிலையத்தில் காளான் கறி தயாரித்தல் தொடர்பான பயிற்சி மகளிர் குழுவிற்கு அளிக்கப்பட்டது

கெட்ட நடவடிக்கைகள் ஆரம்பத்தில் இன்பமாக இருந்தாலும் கடைசியில் கொடும் துன்பக் காட்டுக் குத்தான் அழைத்துச் செல்லும்.

– *கவி தாம்ஸன்*

வலம்புரி

# சொத்துப் பாதுகாப்பில் வங்கிகள் உதவுமா?

யாழ்.குடாநாட்டு மக்களுக்கு மாரகச் சனி அயல் வீட்டில் குடியிருப்பது போல எந்நாளும் உயிராபத்து. ஒன்று முடிந்தால் இன்னொன்று.

அவர்கள் நிம்மதியாக இருந்த வரலாறு இல்லவே இல்லை.

சுமார் 30 வருடகால நீண்ட யுத்தம் யாழ்ப்பாண மக்களின் வாழ்வாதாரங்களைக் கருவறுத்துவிட்டது.

சொந்த இடங்களில் இருந்து அகதிகளாக வெளியேற்றப்பட்டமை தொடக்கம் செல்வீச்சு, விமானக் குண்டுத் தாக்குதல், கைது, காணாமல் போதல் என்ற சோக எல்லை நீண்டு சென்று, வன்னி யுத்தம் இமயத்து வேதனையைத் தந்து தமிழர் மனங்களை ரணமாக்கிவிட்டது.

நிலைமை இதுவாக இருக்கையில் தற்போது களவு, கொள்ளை, கொலை தலைவிரித்தாடத் தொடங்கியுள்ளன.

சுருங்கக் கூறின் யாழ்ப்பாண மக்களின் நித்திரை தூக்கத்திற்கு மீளாத் துயரம் வந்துள்ளது.

விழிப்புக்குழுக்களின் செயற்பாடுகள் ஓரளவுக்குக் களவைக் கட்டுப்படுத்தினாலும் விழிப்புக்குழுக்கள் இயங்கும் பிரதேசங்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளது.

இதற்கு மேலாக மக்கள் தங்கள் சொத்துக்களுக்கான பாதுகாப்பைத் தேடுவதில் எத்தனையோ யுத்திகளைக் கையாண்டாலும் கத்தியை கழுத்தில் வைக்கும்போது எடுத்துக் கொடுப்பதைத் தவிர வேறு வழி ஏதுமில்லை.

சிலர் தமது தங்க நகைகளை வங்கிகளில் அடகு வைத்துவிட்டு வட்டி செலுத்துகின்றனர்.

நூறு பவுண் தங்க நகையை அடகு வைத்து மூவாயிரம் ரூபாயை அடகுப் பணமாகப் பெற்றால் பரவாயில்லை.

ஆனால் பவுணின் நிறைக்கேற்ப அடகுப் பணத்தை எடுத்தாக வேண்டுமென்பதால் தங்க நகையைப் பாதுகாக்க வட்டி செலுத்தும் அதிசயம் யாழ்ப்பாணத்தில் நடக்கின்றது.

எத்தனையோ கணக்குகளை ஆரம்பிக்கும் வங்கிகள் யாழ்ப்பாணத்தில் நகைகளைப் பாதுகாப்பதற்கு வைப்புப் பெட்டக (Iron Locker) வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமானால் வங்கிகளின் பெயரால் யாழ்ப்பாண மக்கள் நிம்மதியாக நித்திரை கொள்வார்கள் அல்லவா?

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட மிக நெருக்கடியான காலங்களிலெல்லாம் வங்கிச் சேவையை மிகச் சிறப்பாக நடத்தி குடாநாட்டு மக்களுக்கு பேருதவி புரிந்த யாழ்ப்பாண வங்கிகள், காலம் உணர்ந்து வைப்புப் பெட்டக வசதியைச் செய்து கொடுக்கும் என்ற நம்பிக்கை நிறையவே உண்டு.

# புனர்வாழ்வு அளிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 20 ஆயிரமாக அதிகரிக்கலாம்

## புதிய பணிப்பாளர் தயா ரட்ணாயக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திடம் சரணடைந்துள்ள சுமார் 10 ஆயிரம்புலி உறுப்பினர்களை சமூகமயப்படுத்தும் நோக்கில்புனர்வாழ்வளிக்கும் வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நலன்புரி நிலையங்களில் மேற்கொள்ளப்படும்விசாரணைகளின் போது புலிகளுடன் தொடர்புபட்டிருந்தவர்கள்அடையாளம் காணப்படுகின்றனர். விரைவில் புனர்வாழ்வு அளிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்துக்கும்20ஆயிரத்துக்கும் இடைப்பட்ட தொகையாக மாறும் என முன்னாள் போராளிகளுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கான புதிய பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ள பிரிகேடியர் தயா ரட்ணாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகத்துறை அமைச்சில் கடந்த வியாழக்கிழமை காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட பிரிகேடியர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இராணுவ பேச்சாளராக முன்னர் கடமையாற்றிய பிரிகேடியர் தயாரட்ணாயக்க, முன்னாள் போராளிகளுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கான பணிப்பாளர் நாயகமாக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை புனர்வாழ்வு தொடர்பான விடயதானம் இதுவரை ஜனாதிபதியின் பொறுப்பில் இருந்தது. அதற்கு பொறுப்பாக நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சுக்கு மாற்றப்பட்டுள்ளது. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் அடுத்தவாரம் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இதன் பின்னணியில் நேற்று முன்தினம் ஊடகத்துறை அமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பிரிகேடியர் தயா ரட்ணாயக்க கலந்துகொண்டார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

யுத்தத்தின் பின்னரான பாரிய சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திப் பணிகளில் நாங்கள் ஈடுபட வேண்டியுள்ளது. அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியுள்ளது. யுத்தம் முடிவுற்றதையடுத்து அரசாங்கத்திடம் அதிக எண்ணிக்கையிலான புலி உறுப்பினர்கள் சரணடைந்துள்ளனர். மேலும் விசாரணைகள் மூலம் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தற்போதைய நிலையில் வவுனியாவில் பல இடங்களில் அமைந்துள்ள 12 முகாம்களில் 9 ஆயிரத்து 796 புலி உறுப்பினர்கள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வருகின்றனர். இவர்களில் ஆண்களும், பெண்களும் அடங்குகின்றனர். சிறுவர் போராளிகள் 455 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவருக்கும் புனர்வாழ்வளிக்கும் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. மேலும் கிழக்கில் சரணடைந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட புலி உறுப்பினர்களில் 837 பேருக்குத் தொடர்ந்து புனர்வாழ்வளிக்கப்பட்டு வருகின்றது.

சர்வதேச மற்றும் உள்நாட்டு அமைப்புக்களின் உதவியுடன் இவர்களுக்கு புனர்வாழ்வளித்து சமூகத்தின் நற்பிரஜைகளாக உருவாக்குவதே எமது நோக்கமாகும். அவர்கள் எதிர்காலத்தில் இந்த இடத்தில் கூட (ஊடகத்துறை அமைச்சு) வந்து அமரலாம். அவர்கள் விரும்புகின்ற துறைகளுக்கு அவர்களை ஈடுபடுத்த நாங்கள் நடவடிக்கை எடுப்போம்.

நாட்டின் உற்பத்தித் துறையில் முன்னாள் புலி போராளிகளை ஈடுபடுத்துவோம். பெரும்பாலானவர்கள் விவசாயம் மற்றும் மீன்பிடி போன்ற துறைகளில் தொழில் புரியும் நிலையில் உள்ளனர். அவர்களின் விருப்பத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படும். புனர்வாழ்வு அளிக்கப்படும் உறுப்பினர்களில் முன்னாள் தற்கொலை போராளிகளும் உள்ளனர். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# வெளிநாடு செல்லமுயன்ற மருத்துவர் விமான நிலையத்தில் வைத்துக் கைது

## புலிகளுடன் தொடர்பாம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புகள் வைத்திருந்தார் எனத் தெரிவிக்கப்படும் சிங்கள மருத்துவர் ஒருவர் வெளிநாடு செல்ல முயற்சித்த போது கட்டுநாயக்க விமானநிலையத்தில் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

குறிப்பிட்ட மருத்துவர் அனைத்துலக அரசசார்பற்ற நிருவனம் ஒன்றில் மிக உயர் பதவியை வகிப்பவர் எனவும், வடக்குக் கிழக்குக் பகுதிகளில் உள்ள மருத்துவ மனைகள் உட்பட பல மருத்துவ மனைகளில் பணியாற்றியவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

டுபாய் ஊடாக ஈராக் செல்வதற்கான விமானத்தில் பயணம் செய்வதற்கான கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்றிருந்தபோது கடந்த புதன்கிழமை புலனாய்வுத் துறையினர் கைது செய்துள்ளார்கள்.

இவரிடம் பல இறுவட்டுக்கள் இருந்ததாக தெரிவிக்கும் புலனாய்வுத் துறையினர், அவரின் பயணம் தொடர்பாக துருவி துருவி விசாரித்த போதிலும் சரியான முறையில் அவர் பதிலளிக்கவில்லையென தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட மருத்துவர் பயங்கரவாத புலனாய்வுத் துறையினரிடம் மேலதிக விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ச-5)

# மாடியிலிருந்து விழுந்த இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழப்பு

## வெள்ளவத்தையில் சம்பவம்

(கொழும்பு)

கொழும்பு, வெள்ளவத்தை பகுதியில் அமைந்துள்ள தொடர்மாடிக் குடியிருப்பொன்றின் 9ஆவது மாடியிலிருந்து விழுந்த இளைஞரொருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் அத்தியட்சகருமான ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

நேற்று அதிகாலை 12.45க்கும் 1மணிக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில்இடம்பெற்ற இச் சம்பவத்தில் மேற்படி குடியிருப்பில் தங்கியிருந்த பிரதீப் சாந்தகுமார் (வதுது 25) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

இதனையடுத்து அதே குடியிருப்பில் தங்கியிருந்ததாகக் கூறப்படும் பெண்ணொருவர் பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தீவிர விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார் என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறியதாவது, குறித்த தொடர்மாடிக் குடியிருப்பின் 9ஆவது மாடியில் அமைந்துள்ள வீட்டில் வாடகைக்கு இருந்த இளைஞனே இவ்வாறு உயி ரிழந்தவராவார். இவருடன் அந்த வீட்டில் பெண்ணொருவரும் தங்கியி ருந்துள்ளார் என்று பொலிஸார் மேற் கொண்ட ஆரம்ப விசாரணை களின் போது தெரியவந்தது.

அதிக போதை காரணமாக குறி த்த இளைஞன் மாடியிலிருந்து தவறி விழுந்துள்ளாரா அல்லது அவரை யாராவது தள்ளி விழுத்தி யுள்ளனரா? என்பது குறித்து பொலிஸாருக்கு சந்தேகம் எழுந்துள்ளது. இந்த சந்தேகத்தின் பிரகாரமே அவ் விளைஞனுடன் தங்கியிருந்த பெண் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப் பட்டு வருகின்றார் என்றார். (ஓ-6)

# சுவாமி விவேகானந்தரின் எல்லாவற்றிலும் இறைவனைக் காணலாம்



உணர்ச்சிகளாலும், புலன்களாலும் ஆட்டி வைக்கப்படுகின்ற மனிதனுக்குச் செயல் என்பது பற்றி என்ன தெரியும்? சொந்த ஆசைகளால் தூண்டப்படாதவன் தான், சுயநலம் துளியும் இல் லாதவன் தான் செயல் புரிய முடியும். தனக்கென்று சுய நோக்கம் எதுவும் இல்லாதவன் தான் வேலை செய்ய முடியும். லாபம் கருதாதவன் தான் வேலை செய்ய முடியும்.

ஓவியத்தை ரசிப்பது யார்? விற்பவனா ; பார்க்க வந்தவனா? விற்பவன், அந்தப் படத்தை விற்பதால் தனக்கு எவ்வளவு லாபம் கிடைக்கும் என்று கணக்கு வழக்குகளில் மூழ்கிக் கிடக்கிறான் ; அதை ஏலத்திற்கு விடலாமா, விலை எப்படி ஏறுகிறது ஏந்த இடத்தில் மூன்றாம் தரம் கூறினால் லாபம் அதிகமாகும் என்பதில் கவனமாக இருக்கிறான். அவனது மனம் முழுவதிலும் அந்த எண்ணமே நிறைந்திருக்கிறது. அந்த படத்தை வாங்கும் எண்ணமோ விற்கும் எண்ணமோ இல்லாமல் அங்கே போயிருக்கும் ஒருவன் தான் அந்தப் படத்தைப் பார்த்து ரசிக்க முடியும். அவனே அந்தப் படத்தை அனுபவிக்கிறான். அதைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறான்.

# சர்வதேச சட்டங்களும் ஜெனீவாவின் சமவாயமும் இலங்கைக்குள் சாத்தியமில்லை

## சட்டமா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்றது சர்வதேச ரீதியிலான ஆயுதமோதல் அல்ல.எனவே, சர்வதேச சட்டத்துக்கும் ஜெனீவா சமவாயத்துக்கும் இதனை உட்படுத்த முடியாது. அது இங்கு சாத்தியமும் இல்லை என்று சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சமாதானம் என்பது மக்களின் ஆர்வத்துடன் உருவாக்கப்பட வேண்டும். இதில் கடந்த கால கசப்புணர்வுகள் மறக்க ப்படல் வேண்டும் என்பது அவசியம்.அத்துடன் சட்டப் பொறிமுறையின் அடிப்படையில் முன்னாள் போராளிகளுக்கு பொதுமன் னிப்பு வழங்கவும் முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னாள் போராளிகளை சமூக வாழ்வில் ஒருங்கிணைத்தல் எனும் தலைப்பின் கீழ் இடர்முகாமைத்துவ மற்று ம் மனித உரிமைகள் அமைச்சுடன் சர்வதேச தொழில் ஸ்தாபனம் இணைந்து நடத்திய தேசிய கருத்திட்ட கருத்தரங்குகொழும்பு சிமைன்ட் கிராண்ட் ஹோட்டலில் கடந்த வியாழக்கிழமை அமைச்சர் மஹிந்த சமர சிங்க தலைமையில் நடைபெற்றது. இக்க ருத்தரங்கில் கலந்து கொண்டு பேசுகையி லேயே சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கூறுகையில்,

பல தசாப்தங்களின் பின்னர் தற்போது நாம் சமாதான சூழலொன்றை எட்டியுள் ளோம். வன்முறைக்கலாசாராம் இல்லா தொழிக்கப்பட்ட நிலையில் சமாதானத்துக்கான அழைப்பு விடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

மோதல்களில் இருந்து மீண்டுள்ள நிலையில் உடனடி சமாதானம் என்பது சற்று கடினமானதுதான்.எனினும் சமாதானத்தை தோற்றுவிப்பதற்கு மக்களிடத்தில் ஆர்வத்தினை உருவாக்க வேண்டும்.அதற்கான காலம் இப்போது தான் கனிந்துள்ளது.

நிலையான சமாதானம் வேண்டுமெனில் கடந்தகால கசப்புணர்வுகள் மறக்கப்படவேண்டியது மிக மிக அவசியமானதாகும்.

ஸ்பெயின் போன்ற நாடுகளை நாம் முன்னுதாரணமாகக் கொண்டு செயற்பட வேண்டியதும் இன்றைய தேவையின் ஒன்றாகியுள்ளது.

மோதல்களில் ஈடுபட்ட வர்கள், மோதல்களால் பாதிக்கப்பட்டவர்கள் என சகல தரப்பினரது எண்ணங்களையும் அறிந்துகொள்வது அவசியமானது. அதற்கேற்றவாறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதுடன் தேவையான பாதுகாப்பினையும் அவர்களின் அடிப்படைத் தேவைகளையும் உறுதிசெய்வது பூரணமானதாகும்.

நடைமுறையில் இரண்டு அம்சங்கள் காணப்படுகின்றன. ஒன்று குற்றமிழைத்தவர்களை நீதிக்கு முன் கொண்டு வருவது மற்றையது பழிவாங்கவேண்டும் என்ற அடிப்படையில் சட்டத்துக்கு முன் நிறுத்துவது. இதனை விடுத்து தற்போதைய முன்னாள் போராளிகளுக்கு தண்டனை வழங்குவதை விட அவர்களுக்கு சட்ட பொறிமுறையின் அடிப்ப டையில் மன்னிப்பு வழங்க முடியும்.

இந்த மன்னிப்பு நடவடிக்கையானது ஒரு வகையில் வன்முறையைக் குறைப்பதற்கும் உதவுவதாக இருக்கும். அதன் அடிப்படையில் இது புரிந்து கொள்ளப்படல் வேண்டும். இவ்வாறான நடைமுறைக்கு சாத்தியமான காரியங்களைக் கூட நடைமுறைப்படுத்தாது சமாதானம் என்பது இயலாத விடயம்.

முன்னாள் போராளிகள் மன்னிக்கப்படுவதன் மூலமே அவர்களை நல்ல பல திட்டங்களுக்கு உள்வாங்கவும் முடியும்.

எமது நாட்டின் நடவடிக்கைகளுக்கு சர்வதேச சட்டங்கள் உசிதமானவை அல்ல. ஜெனீவா சமவாயத்தை இலங்கை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. அதற்கான கடமையும் எமக்குள்ளது.

இந்நிலையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மோதல்கள் சர்வதேச ரீதியிலான ஆயுதமோதல்கள் இல்லை. இது உள்நாட்டு மோதல்களாகும்.ஜெனீவா சமவாயத்தின் அடிப்படையில் பாரிய மனித உரிமை மீறல்கள், சித்திரவதைகள் இடம்பெற்றிருந்தால் மாத்திரமே வழக்குகளை தொடர முடியும் .எனினும் இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு ஆயுதப்போராட்டம் சர்வதேச சட்டங்களுக்கும் ஜெனீவா சமவாயத்துக்கும் உட்பட்டதல்ல. எனவேதான் சர்வதேச சட்டமும் ஜெனீவா சமவாயமும் இங்கு சாத்தியமானதல்ல என்று கூறுகிறேன்.

முன்னாள் போராளிகளை சமூக வாழ்வில் ஒருங்கிணைத்தல் என்ற தேசிய திட்டத்தில் நாம் முன்னாள் போராளிகளுக்கு எந்தளவு முன்னுரிமை வழங்குகிறோமோ அதேயளவு முன்னுரிமை மோதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் வழங்கப்படல் அவசியமானது. (ஓ-6)

# யாழ்.மாவட்டத்தில் காளான் உற்பத்தி திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் காளான் செய்கையை ஒரு வருமானம் ஈட்டும் தொழிலாக விரிவுபடுத்தும் நோக்குடனும், பொதுமக்கள் காளானை தமது உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் போசணை மட்டத்தினை மேம்படுத்தும் நோக்குடனும், விவசாயத் திணைக்களம் காளான் உற்பத்தி மேம்படுத்தல் திட்டங்களை அமுலாக்கி வருகின்றது.

மட்டுவில், சிறுப்பிட்டி, ஏழாலை, அளவெட்டி, சிறுவிளான், ஊரெழு, யாழ்.நகர் 2ஆம் குறுக்குத்தெரு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 10 விவசாயிகளால் காளான் உற்பத்தி நடவடிக்கை தற்போது வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

விவசாயத் திணைக்களத்தின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியீட்டத்தின் கீழ் கரவெட்டி, பருத்தித்துறை, சங்கானை, காரைநகர், சண்டிலிப்பாய், உடுவில் ,சாவகச்சேரி, கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 10 பயனாளிகளுக்கு காளான் செய்கைக்குத் தேவையான பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளதோடு காளான் உற்பத்திக்கு உள்ளீடுகளும் வழங்கப்படவுள்ளன.

வடக்கின்வசந்தம் 2009 இன் கீழ்கமநெகும திட்டத்தின் கீழ் நல்லூர், சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், தெல்லிப்பளை, பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவிலும் 5 பயனாளிகள் வீதம் 30 பயனாளிகளும் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 10 பயனராளிகளும் தெரிவு செய்யப்பட்டு காளான் உற்பத்தி தொடர்பான பயிற்சிகளும் உள்ளீடுகளும் வழங்கப்படவுள்ளதாக யாழ். பிரதி விவசாயப் பணிப்பாளர் தெரிவித்துள் ளார். ஓ



மாகாண மட்ட கரப்பந்தாட்டப் போட்டியில்அச்சுவேலி மத்திய கல்லூரியின் 19 வயது கீழ் ஆண்கள் கரப்பந்தாட்ட அணி இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

அணிவீரர்கள் அதிபர்,பிரதிஅதிபர், பொறுப்பாசிரியர்மற்றும் பயிற்றுவிப்பாளர்களுடன் காணப்படுகின்றனர்.



உள்ளூராட்சி வார நிகழ்வை முன்னிட்டு சாவகச்சேரி நகரசபையினரின் மரம் நடுகைத் திட்டத்தின் கீழ் சபையின் கணக்காளர் எம்.சுப்பிரமணியம் மரம் நாட்டுவதையும், அருகில் சபை உத்தியோகத்தர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.


ஆயுஷ் ஹோம அழைப்பு

நிகழும் மங்கலகரமான விரோதி வருஷம் ஆடிமாதம் 16 ஆம் நாள் (01.08.2009) இன்று சனிக்கிழமை கேட்டை நட்சத்திரத்திரமும் சித்த யோகமும் கூடிய முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணியளவில் வரும் சுபவேளையில்



எமது புதல்வி

வைஷ்ணவி

தனது முதலாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாட இருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்து வைபவத்தினைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

நெல்லூர்பதி பிள்ளையார் கோவிலடி,தாவடி தெற்கு, கொக்குவில்.

உ.கிருஷ்ணராசக் குருக்கள்
ஸ்ரீமதி கி.உதயதர்சினி
தம்பதியினர்

(C-2953)


# வவுனியாவிற்கான இரவு தபால் புகையிரதம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா வவுனியா மக்களின் நலன்கருதி இரவு தபால் புகையிரதத்தை வவுனியா புகையிரத நிலையம் வரை போக்குவரத்தில் ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் போக்குவரத்து அமைச்சர் டளஸ் அழகப் பெருமவுடன் தொடர்பு கொண்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடிதற்கு இணங்க தற்போது இந்த புகையிரத சேவை வவுனியாவரையில் நீடிக்கப்பட்டுள்ளதுடன் வெகுவிரைவில் வவுனியா புகையிரத நிலையத்தில் இருந்து இரவு தபால்புகையிரதம் கொழும்பு நோக்கி புறப்படுவதற்கும் அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# ஆலய புனரமைப்பிற்கான நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்ட ஆலய புனரமைப்புக் கான நிதி உதவி வழங்கல் தொடர்பாக கோப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட வன்செயலால் பாதிக்கப்பட்ட இந்து ஆலய புனரமைப்புக்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நிதி உதவிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

ஆதலால் ஆலயம் புனரமைக்க வேண்டியவர்கள் ஆலயத்தின் பெயர் முகவரி த கிரம அலுவலர் பிரிவு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தினால் பதிவு செய்யப்பட்ட பதி விலக்கம் சேத விபரம் புனரமைப்புக் கான உத்தேச மதிப்பீடு த வரைபடம் ஆகிய விபரங்கள் அடங்கிய ஆவணங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் கோப்பாய் பிரதேச செயலக கலாசாரப்பகுதியில் ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் சி. ஏ. மேகன்ராஸ் கேட்டுக்கொள்கின்றார்.





மாகாண மட்ட போட்டிகளுக்காகச் சென்ற யாழ். இந்துக்கல்லூரி வீரர்கள் அனைவரும் தாம் கலந்து கொண்ட போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளனர். வெற்றிபெற்ற மாணவர்கள் அதிபர், பொறுப்பாசிரியர்களுடன் எடுத்துக் கொண்ட படங்களை இங்கு காணலாம்.

# டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து 2010-ல் முரளிதரன் ஓய்வு

(தம்புள்ள)

2010ஆம் ஆண்டுடன் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறப் போவதாக முரளிதரன் அறிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் சுழல் நாயகன் முரளிதரன் டெஸ்ட் வரலாற்றில் அதிக விக்கெட் (770) வீழ்த்தி உலக சாதனை படைத்துள்ளார்.



சமீப காலமாக முழங்கால் பகுதியில் ஏற்பட்ட காயத்தால் அவதிப்பட்டு வருகிறார்.

இதையடுத்து டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறமுடிவு செய்துள்ளார்.

ஒருநாள் மற்றும் இருபது-20 போட்டிகளில் தொடர்ந்து விளையாடுவார்.

இது குறித்து 37 வயதான முரளிதரன் கூறுகையில்;

அடுத்த ஆண்டு நவம்பரில் மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிராக 2 டெஸ்ட் போட்டிகளில் இலங்கை அணி பங்கேற்கிறது.

இது நான் விளையாடும் கடைசி டெஸ்ட் தொடராக இருக்கும் என நினைக்கிறேன்.

சர்வதேச ஒருநாள் போட்டிகளில் தொடர்ந்து பங்கேற்பேன். 2011-ல் நடக்க உள்ள உலக கோப்பை போட்டியில் விளையாட விரும்புகிறேன்.

இருபது-20 போட்டிகளில் இன்னும் சில ஆண்டுகள் விளையாட வாய்ப்புள்ளது என்றார்.

## விளம்பரத்தில் நடிகை அசினுடன் அணித்தலைவர் தோனி தோன்றுகிறார்



இந்திய அணியின் வெற்றி அணித்தலைவராக வலம்வரும் தோனி, விளம்பர உலகின் விருப்ப நாயகனாகவும் திகழ்கிறார். சமீபத்தில் பாலிவூட் கவர்ச்சி நாயகி பிபாஷா பாசுவுடன் இணைந்து 'ஷ' விளம்பரத்தில் தோன்றி பரபரப்பு ஏற்படுத்தினார்.

தற்போது நடிகை அசினுடன் ஜோடி சேர்ந்து இன்னொரு விளம்பரத்தில் கலக்கியுள்ளார். இந்திய கிரிக்கெட்டில் காலடி எடுத்து வைத்த மிக குறுகிய காலத்தில் அசுர வளர்ச்சி கண்டவர் தோனி. இருபது-20 உலக கோப்பை வென்ற பின், இவரது புகழ் பன்மடங்கு உயர்ந்தது. விளம்பர நிறுவனங்கள் இவரை தேடிவந்தன. ஒரு நிறுவனத்துக்கு மொடலாக தோன்ற பல கோடி ரூபாய் சம்பளமாகப் பெற்றார்.

முதலில் சக கிரிக்கெட் வீரர்களுடன் விளம்பரபடங்களில் தலை காட்டிய இவர், சமீப காலமாக பிரபல நடிகைகளுடன் இணைந்து அசத்துகிறார். பிபாஷா பாசுவுடன் நடித்த 'ஷ' விளம்பரம் 'கிளிக்' ஆக, தற் போது அசினுடன் இணைந்து



'பிக் பஜார்' நிறுவனத்துக்கு மொடலாக தோன்றியுள்ளார்.

தமிழில் இருந்து இந்தி உலகிற்கு தாவியுள்ள அசினுக்கு இந்த விளம்பரம் இன்னொரு திருப்பு முனை ஏற்படுத்தலாம். இவ்விளம்பரம்படப்பிடிப்பின் ஓய்வு நேரங்களில் அணித்தலை வர் தோனியும், நடிகை அசினும் உல்லாசமாக பழகியுள்ளனர். இரு வரும் ஒரு சில மணி நேரத்தில் வித விதமான உடைகளில் தோன்றி யுள்ளனர்.

அசின்குறித்து தோனி கூறுகையில்;

அவர் குழந்தை குணம் படைத்தவர். அனைவரிடத்திலும் அன்பாக பழகக் கூடியவர் என்றார்.

தோனிக்கு நடிகைகளின் அன்புத் தொல்லை அதிகம். பாலிவூட் நடிகைகள் தீபிகா படுகோனே, பிபாஷா பாசு, பிரித்தி ஜிந்தா மற்றும் கோலிவூட் டில் லட்சுமிராயுடன் இவருக்குள்ள தொடர்பு பற்றி நிறைய கிசுகிசுக்கள் வெளியாயின. இவர்கள் வரிசையில் அசினும் சேருவாரா? பொறுத் திருந்து பார்ப்போம்.

## சம்பியன்ஸ் லீக் இருபது-20 தொடர்; போட்டி அட்டவணை அறிவிப்பு

(மும்பை)

சம்பியன்ஸ் லீக் இருபது-20 தொடருக்கான அட்டவணை அறிவிக்கப்பட்டுள்ளது. பெங்களூர், ஐதராபாத் மற்றும் டில்லியில் போட்டிகள் நடக்கவுள்ளன. இறுதிப் போட்டி ஐதராபாத்தில் நடக்கிறது.

உள்ளூர் இருபது-20 தொடரில் சம்பியனான அணிகள் சம்பியன்ஸ் லீக் இருபது-20 தொடரில் மோத உள்ளன. கடந்த 2008ஆம் ஆண்டு முதலாவது சம்பியன்ஸ் லீக் இருபது-20 தொடர் நடக்கவிருந்தது.

ஆனால் மும்பை பயங்கரவாத தாக்குதலை தொடர்ந்து இத்தொடர் கைவிடப்பட்டது. தற்போது இரண்டாவது தொடர் எதிர்வரும் ஒக்டோபர் 8ஆம் திகதி இந்தியாவில் நடக்க உள்ளது.

12 அணிகள் இத் தொடரில் பங்கேற்க உள்ளன. இந்திய தரப்பில் ஐ.பி.எல். இருபது-20 தொடரின் நடப்பு சம்பியன் டெக்கான் சார்ஜர்ஸ், இரண்டாவது இடம் பிடித்த பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் மற்றும் டில்லி டேர்டேவில்ஸ் ஆகிய மூன்று அணிகள் இடம் பெற்றுள்ளன.

அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, இங்கிலாந்து தரப்பில் தலா இரண்டு அணிகளும் நியூசிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள், இலங்கை தரப்பில் தலா ஒரு அணிகளும் தொடரில் பங்கேற்கவுள்ளன.

12அணிகளும் 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, லீக்போட்டியில் மோதும். ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களில் வரும் அணிகள் 2ஆவது சுற்றுக்கு (8 அணிகள்) தகுதி பெறும். இதில் 2 பிரிவாக அணிகள் போட்டிகளில் பங்கேற்கும்.

இதன் முடிவில் நான்கு அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும். எதிர்வரும் ஒக்டோபர் 8ஆம் திகதி நடக்கும் தொடரின் முதல் போட்டியில் பெங்களூர் றோயல்ஸ் அணி தென்னாபிரிக்காவின் கோப்ராஸ் அணியுடன் மோதவுள்ளது. அரையிறுதிப் போட்டிகள் ஒக்டோபர் 21 மற்றும் 22ஆம் திகதிகளில் நடக்கிறது.

இறுதிப் போட்டி 23ஆம் திகதி ஐதராபாத்தில் நடக்க உள்ளது. மொத்தம் 23 போட்டிகள் 16 நாட்களில் நடக்க உள்ளன. போட்டிகள் இலங்கை நேரப்படி மாலை 4, இரவு 8 மணிக்கு ஆரம்பமாகிறது.

சம்பியன்ஸ் லீக் இருபது-20 கோப்பையை எதிர்வரும் 5 ஆண்டுகளுக்கு வழங்கும் உரிமையை ஏர்டெல் நிறுவனம் பெற்றுள்ளது. இதற்கான ஒப்பந்தத் தொகை ரூபாய் 170 கோடி என்பது குறிப்பிடத்தக்கது.

## 5 நாட்கள் முடிவில் 29 உலக சாதனைகள்

இத்தாலியில் நடைபெற்று வரும் உலக சம்பியன்ஷிப் நீச்சல் போட்டியில் தொடர்ந்து உலக சாதனைகள் முறியடிக்கப்பட்டு வருகின்றன.


போட்டியின் 5ஆவது நாளான நேற்று முன்தினம் மாத்திரம் 7 உலக சாதனைகள் முறியடிக்கப்பட்டன. இதன்படி இம்முறை உலக சம்பியன்ஷிப் போட்டியில் புதிதாக படைக்கப்பட்ட உலக சாதனைகளின் எண்ணிக்கை 29ஆக அதிகரித்துள்ளது. போட்டிகளில் மேலும் 3 நாட்கள் எஞ்சியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது நேற்று முன்தினம் நடந்த ஆண்களுக்கான 200 மீற்றர் மெட்லே போட்டியில் அமெரிக்காவின் ரயான் லொச்சோட 1 நிமிடம் 54.10 வினாடிகளில் போட்டித் தூரத்தை முடித்து ஒலிம்பிக் சம்பியன் மைக்கெல் பெல்ப்ஸின் உலக சாதனையை முறியடித்தார். பெல்ப்ஸ் இம்முறை தொடரில் பறிகொடுக்கும் இரண்டாவது உலக சாதனையை இதுவாகும்.

இதனிடையே இம்முறை உலக சாதனைகள் முறியடிக்கும் வேகம் அதிகரிப்பதற்கு வீர, வீராங்கனைகள் உயரிய தொழிநுட்பத்திலான நீச்சல் உடைகளை பயன்படுத்துவதே காரணம் என்று பரவலாக விமர்சனம் எழுந்துள்ளது. இதற்கு முன்னாள் நீச்சல் வீரர்கள் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர். இம் முறை உலக சம்பியன்ஷிப் போட்டிகளில் உலக சாதனைகள் முறியடிக்கப்படாமல் முடிபடைந்த போட்டிகள் மிகக் குறைவு என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம் 104





சிம்பாவே அணியுடனான தொடரை தொடர்ந்து இலங்கை அணி 1998 மார்சில் தென்னாபிரிக்கா பயணமானது.

தென்னாபிரிக்காவில் 2 டெஸ்ட், 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் இலங்கை அணி விளையாடியது.

இதில் முதலாவது டெஸ்ட் 1998ஆம் ஆண்டு மார்ச் 19ஆம் திகதி கேப்டவுனில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி முதலாவது இன்னிங்ஸில் 418 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் முரளிதரன் 45 ஓவர்கள் பந்துவீசி 8 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 135 ஓட்டங்களைக் கொடுத்து அக்கர்மன் (23), ஜக்கலிஸ் (03), டொனால்ட் (12), அடம்ஸ் (02) ஆகியோரை ஆட்டமிழப்புச் செய்து 4 விக்கெட்டுக்களை பதம் பார்த்தார்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 306 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் முரளிதரன் ஆட்டமிழக்காமல் 22 பந்துகளில் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 15 ஓட்டங்களை எடுத்தார்.

இந்நிலையில் முதலாவது இன் னிங்ஸில் 112 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையிலிருந்த தென்னாபிரிக்க அணி இரண்டாவது இன்னிங்ஸில் முரளிதரனின் துல்லியமான சுழலில் முன்னணித் துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்காத நிலையில் 264 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் முரளிதரன் 41 ஓவர்கள் பந்துவீசி 10 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 108 ஓட்டங்களைக் கொடுத்து குல்லினன் (68), பௌச்சர் (10), அக்கர்மன் (08), அடம்ஸ் (03) ஆகியோரை வெளியேற்றி 4 விக்கெட்டுக்கள் கைப்பற்றினார்.

பதிலுக்கு 377 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 306 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து 70 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இதில் முரளி தரன் 10 ஓட்டங்களை எடுத்து ரன்-அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

### பாலா

இப்போட்டியில் முரளிதரன் இரண்டு இன்னிங்ஸிலுமாக 8 விக்கெட்டுக்களை வீழ்த்தி அசத்திய போதும் இலங்கை அணி தோல்வி அடைந்தது.

(பயணிக்கும்)



நல்லூர்க் கந்தன் கொடிய வினைகள் நீக்கி யாவருக்கும் நல்லருள் புரிய வேண்டுகின்றோம்.

உத்தரவாதத்துடன் தங்க நகைகளைப் பெற்றிட நாடுங்கள்

ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்
இல. 10, பஸ் நிலையம், சங்கானை.
(C-2928)


# இன்னிசை இரவை முன்னிட்டு இன்று முழுவதும் ஊரடங்கு தளர்வு

(யாழ்ப்பாணம்)

ஐ.ரி.என். தொலைக்காட்சி சேவையின் அனுசரணையில் தென்னிந்திய பாடகர்களுடன் தென்னிலங்கை இசைக்குழுவினர் வழங்கும் மாபெரும் இன்னிசை இரவு இன்று மாலை 6 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. முன்னர் யாழ்.மத்திய கல்லூரியில் நடை பெறவிருந்த இந் நிகழ்வு தற்போது யாழ். துரையப்பா விளையாட்டரங்கிற்கு மாற்றப்பட்டுள்ளது.

இந் நிகழ்வைமுன்னிட்டு இன்று இரவு முழுவதுமாக ஊரடங்கு தளர்த்தப்படுவதாக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் யாழ்.பிரசார அலுவலகம் அறிவித்துள்ளது. அத்துடன் இந் நிகழ்வைக் காண வரும் குடாநாட்டு மக்களின் போக்குவரத்து வசதிகளிற்காக இன்று இரவு விசேட பஸ் சேவைகள் மாவட்டம் முழுவதுமாக நடைபெறுமெனவும் அவ் அலுவலகம் தெரிவித்துள்ளது. தென்னிந்திய பாடகர்களான ஆர்.ரனினா ரெட்டி, ஆர்.நவீன் ரீட்டா (கயிந்திர தியாக ராஜன்), சேகர், பி.பிர்முகமட்டுடன் இணைந்து கொழும்பு அப்சராஸ் இசைக் குழுவினர் கலந்து இன்னிசை இரவை வழங்கவுள்ளனர். (ச-5)




நல்லூர் கந்தசுவாமி கோ[illegible] மகோற்சவம் சிறப்பு[illegible] வாழ்த்துகின்றோம்

அழகுக்கு அழகு செய்யும் தங்க வைர நகைகளைப் பெறுக்கொள்[illegible] சிறந்த ஸ்தாபனம்

ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்
இல. 10, பஸ் நிலையம், சங்கானை.


## இராணுவத் தளபதி...

சந்தர்ப்பம் இதுவாகும்.

இந்த விஜயத்தின் போது இராணுவத் தலைமையகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் சிலரும் கலந்து கொண்டனர். யாழ்ப்பாணத்திற்கான பாதுகாப்பு படைகளின் புதிய கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.பி.ஆர்.டி. சில்வாவினால் பலாலி விமான நிலையத்தில் இராணுவ தளபதி வரவேற்கப்பட்டார்.

இதன் போது ஆயுதப் படையணி வழங்கிய அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்ட இராணுவத் தளபதி பாதுகாப்புப் படையணித் தலைமையகத்தில் மாமரக்கன்று ஒன்றை நாட்டி வைத்தார்.

இதனை அடுத்து உயிரிழந்த இராணுவீரர்களை நினைவு கூரும் வகையில் இராணுவ நினைவுத் தூபியில் மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

பாதுகாப்பு படையணித் தலைமையகத்தில் வைத்து யாழ்ப்பாணத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள அனைத்து அதிகாரிகளினதும் மத்தியில் உரையாற்றிய இராணுவத் தளபதி இராணுவத்தினர் கடந்த காலத்தில் ஈட்டிக் கொண்ட வெற்றிகள் தொடர்பில் தென்பகுதி மக்களின் கருத்துக்கள் குறித்தும் தெளிவு படுத்தியதாக இராணுவத் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன் பின்னர்52 மற்றும் 55-வது படையணிகளின் தலைமையகங்களுக்கும் 7ஆம் நடவடிக்கைப் பிரிவுக்கும் இராணுவத் தளபதி விஜயம் செய்தார். (ச-3)

## கல்வி அமைச்...

யாழ்.மாவட்ட கல்வித்துறையிலுள்ள பல்வேறு பிரச்சினைகள் ஆராயப்பட்டு தீர்வு காணப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை இம் மாநாட்டில் இரண்டாம் நிலை கல்வி நவீன மயப்படுத்தல் திட்டத்தின் கீழ் பாடசாலைக்கு கணனிகளும் வழங்கப் படவுள்ளது.

இதனை முன்னிட்டு இரண்டாம்நிலை கல்வி நவீன மயப்படுத்தல் திட்டத்தின் தலைவர் அநுர திஸநாயக்க, வடக்கு மாகாண முகாமையாளர் எஸ்.மகேந்திரன் ஆகியோர் இம் மாநாட்டுக்கு வருகை தரவுள்ளனர். (ச-5)

## நிபந்தனைகள்...

பொருளாதார கொள்கை மற்றும் நிதிபயன்பாடு தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதுடன் தற்போது 7 வீதமாக இருக்கின்ற வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை 2011 ஆம் ஆண்டு 5 வீதமாக குறையும் என்றும் அவர் சொன்னார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ச-5)

## இந்திய வெளியுறவுச் செயலராக...

இதையடுத்து 1973ஆம் ஆண்டு ஐ.எப்.எஸ். அதிகாரியாக பணியில் சேர்ந்த நிருபமா ராவ் இன்று வெளியுறவுத்துறை புதிய செயலாளராக பதவியேற்கிறார்.

இத்தகைய உயர் பதவி வகிக்கும் இரண்டாவது பெண் இவர். இவர் சீனாவுக்கான இந்தியத் தூதர், இலங்கைக்கான உயர் ஸ்தானிகர், வெளியுறவுத்துறை அமைச்சக முதல் பெண் செய்தித் தொடர்பாளர் உட்பட பல பதவிகளை வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மும்பை பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பின், பாகிஸ்தானுடனான உறவுகள் மிகவும் நெருக்கடியாக உள்ளன. இத்தகைய சூழ்நிலையில் நிருபமா ராவ் வெளியுறவுத்துறை புதிய செயலாளராக பதவியேற்கிறார்.

பாகிஸ்தான் மட்டுமல்லாது பிற நாடுகளுடனும் நிலவும் குழப்பான சூழ்நிலை தொடர்பான சவால்களை இவர் தனது புதிய பதவியில் எதிர்கொள்ள நேரிடும். (ச-5)

## கொழும்பு...

மூலம் அறிய முடிகின்றது.

இப் போராட்டம் தொடர்பாக எழுத்து மூல அறிவித்தல் எதுவும் இதுவரை தனது பார்வைக்கு வரவில்லை என கூறும் பிரதி நீதி அமைச்சர் வி.புத்திரசிகாமணி, இவர்களது கோரிக்கை தொடர்பாக எதிர்வரும் 10ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் இடம்பெறும் சந்திப்பின்போது தான் பேச விருப்பதாகவும் தெரிவிக்கின்றார்.

கைதிகள் தமது போராட்டத்தை கைவிடுமாறு வேண்டுகோள் விடுக்கும் அவர், எதிர்வரும் திங்கள் அல்லது செவ்வாய்க்கிழமை சிறைச்சாலைக்கு விஜயம் செய்து அவர்களை சந்திக்க உத்தேசித்துள்ளதாகவும் குறிப்பிடுகின்றார். (ச-5)

## கிழக்கு மாகா...

மதுபான முகவர்களும், வியாபாரிகளும் தமது கமிஷன்களை கொடுப்பதற்காக அதிக விலைக்கு மதுபான வகைகளை விற்பனை செய்வதையும் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இல்லையேல் சம்பந்தப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க நேரிடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

## வவு.நலன்புரி...

குடும்பங்கள் தங்களது சொந்த இருப்பிடங்களுக்கு அனுப்பப்படவுள்ளனர்.

இதேநேரம் வவுனியா மாவட்டத்திலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மக்களை வந்து பொறுப்பேற்குமாறு ஜனாதிபதி தெரிவித்துள்ள தகவலை நேற்றைய தினம் காலை ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷ தொலைபேசிமூலம் தெரிவித்ததையடுத்து, வவுனியா நலன்புரி நிலையங்களிலுள்ள 11ஆயிரத்து 960 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 40 ஆயிரம் யாழ்.மாவட்ட மக்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அடுத்த வாரம் முதல் பொறுப்பேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ஓ)

# வேகமான அதிகாரப் பரவலாக்கம்...

அவர் மேலும் கூறியதாவது,

வேகமான அதிகாரப் பரவலாக்கத்திற்குச் செல்வதற்கே நான் விரும்புகிறேன். ஆனால் நாடாளுமன்றத்தில் சிறிய பெரும்பான்மையே எனக்கு இருக்கின்றது.

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பில் பெரிய அளவில் கருத்து ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டியிருக்கிறது.

நான் வேகமாக அதிகாரப் பரவலாக்கத்தை நோக்கிச் சென்றாலும் அது பயன் தராது. அது, ஆபிரகாம் லிங்கன் காலத்தில் அமெரிக்காவில் ஏற்பட்ட உள்நாட்டு போரைப் போன்ற ஒரு போரை இங்கும் ஏற்படுத்தி விடக்கூடும்.

ஏனெனில் பிரபாகரன்து ஒரே இலக்கு என் நாட்டை இரண்டாகப் பிரித்து புதிய நாடு ஒன்றை ஏற்படுத்துவதே என்று மகிந்த ராஜபக்ஷ அந்த நேர்காணலில் கூறியுள்ளார்.

நேர்காணலில் உள்ள முக்கிய விபரங்கள் வருமாறு,

இந்தியாவும இலங்கையும் இதயமும் ஆன்மாவும் போன்றன.

சீனா, பாகிஸ்தான் நாடுகளுடன் நெருங்கிச் செயற்படுத்துவது தொடர்பில் இந்தியாவிடம் இருந்து எந்த அழுத்தங்களும் வரவில்லை. இந்த விடயத்தை இந்தியா மேலும் புரிந்துகொள்ள வேண்டும் என்ற விருப்பம் மட்டுமே எங்களிடம் இருந்தது. அழுத்தங்கள் மேற்கில் இருந்துதான் வந்தன.

பயங்கரவாதிகளின் மிரட்டல்களுக்கு அடிபணிந்து விடுவதற்காகவோ அழுத்தங்களுக்கு பணிந்து விடுவதற்காகவோ என்னை ஜனாதிபதியாக என் மக்கள் தெரிவு செய்யவில்லை.

இந்தியாவின் உணர்வுகள் தொடர்பில் நான் கவனமாக இருக்கிறேன். ஏனெனில் இந்தியா எனது மூத்த நண்பன். இதனை நான் மேற்கின் அதிகார சக்திகளுக்கு வெளிப்படையாகச் சொல்கிறேன்.

நான் நண்பர்கள் என்று கூறினாலும் கூட, எல்லா நாடுகளுமே ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். நான் யாருடைய கைப் பாவையும் கிடையாது. அப்படி இருக்கப் போவதும் இல்லை. நான் ஒரு இலங்கை தேசியவாதி.

நான் பதவியில் இருக்கும் வரையில் இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைளுக்கான தளமாக எந்தவொரு நாடும் இலங்கையைப் பயன்படுத்துவதற்கு நான் அனுமதிக்க மாட்டேன் என்று இப்போதே உறுதி தருகிறேன்.

தமிழர்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று வெளியாட்கள் எனக்கு விரிவுரை நிகழ்த்தத் தேவையில்லை. அவர்கள் எனது மக்கள். அவர்கள் தொடர்பில் என் நாடு பெருமைப்படுகிறது.

நாட்டில் உள்ள எல்லா மக்களையும் போன்று அவர்களுக்கும் எந்த அநீதியும் இழைக்கப்படுவதில்லை.

எனது குடும்பத்தில் தமிழர்களுடன் கலப்புத் திருமணங்கள் நடைபெற்றுள்ளன. என் அமைச்சரவை தமிழர்களைக் கொண்டுள்ளது.

நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்கிறேன். விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட போது அவர்களைக் காப்பாற்றுவதற்காக போர் நிறுத்தம் வேண்டும் என்று வலியுறுத்திய மேற்குலக நாடுகள், அத்தனை விடுதலைப் புலி' உறுப்பினர்களுக்கும் அவர்களின் நாட்டில் அகதி தகுதிநிலை கொடுப்பார்களா?

இனப்பிரச்சினைக்கான தீர்வாக, அடிமட்ட நிலையில் அதிகாரம் பகிரப்படுவதை நான் எப்போதும் ஆதரிக்கிறேன்.

தமிழ் மொழியையும் மதிக்கிறேன். மக்கள் தமது தாய் மொழியை மதிக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும்.

அரசியல் தீர்வு என்னால் தாமதப்படவில்லை. அது புலிகளாலேயே நிகழ்ந்தது. யார் எல்லாம் தீர்வு குறித்துப் பேசினார்களோ அவர்கள் எல்லோரும் ஆயுதமுனையில் கடத்தப்பட்டார்கள் அல்லது கொல்லப்பட்டார்கள்.

அரசியலமைப்பின் 13-வது திருத்தம் தீர்வுக்கான தொடக்கப் புள்ளியாக இருக்கும் என்று நான் வெளிப்படையாக சொல்லி வருகிறேன். அது இந்தியாவாலும் ஏற்றுக் கொள்ளபடக் கூடியது. இலங்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

போரின்போது தமிழர்கள் கொல்லப்பட்டதை இனப்படுகொலை என்று சொல்ல முடியாது. இனப் படுகொலை என்பது ஒரு சமூகத்தால் திட்டமிட்ட முறையில் மற்றைய சமூகம் முற்றாக அழிக்கப்படுவதைக் குறிக்கும்.

அவ்வாறு எந்த ஒரு இனமும் எனது நாட்டில் அழிக்கப்படவில்லை. அத்தகைய பயங்கரச்செயல்களின் பின்னணியில் இலங்கை அரசுகள் எதுவுமில்லை.

நாங்கள் ஒன்றும் பொல்பொட்டினதோ இடி அமீனதோ ஆதரவாளர்கள் அல்ல. இத்தகைய குற்றச்சாட்டைத் தெரிவிக்கும் மேற்குலக நாடுகளினதும் அங்குள்ள ஊடகங்களினதும் செயல் கண்ணாடி வீட்டுக்குள் இருந்து கொண்டு கல்லெறிவதற்கு ஒப்பானது.

நாங்கள் எங்கள் எல்லையிலிருந்து ஆயிரம் மைல்களுக்கப்பால் உள்ள அப்பாவி மக்களை குண்டு வீசிக்கொல்லவில்லை.

போர்ப் பகுதிகளில் மீள் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளவதற்கு வருமாறு இந்தியாவையும் உலக நாடுகளையும் நான் மீண்டும் அழைக்கிறேன்.

எனக்கு முன் உள்ள பெரிய சவாலே எனது தமிழ்ச் சகோதரர்களுக்கு முன்னரை விட பாதுகாப்பானதும் சிறப்பானதுமான வாழ்வு காத்திருக்கின்றது என்பதை புரியவைப்பது தான் என்றாார் அவர். (ச-5)


## நியூ சிற்றி ரேடர்ஸ்

சகலவிதமான I.C., ரான்ஸ்சிஸ்டர், கொன்டென்சர்கள், வீடியோ கெட், பிளைபெக் ரான்ஸ்போமர், பெல்ட், ஸ்பீக்கர், பவல், வூபர்ஸ், மல்டி மீற்றர் மற்றும் இலத்திரனி[illegible] உதிரிப்பாகங்கள் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளவும், சகல விதமான ரேடியோ கசற் ரெக்கோடர், TV, கார் ரேடியோ, டிஸ் TV, ரிசிவர் CD, DVD பிளேயர்கள், சார்சலைற், கிறைன்டர், ரைஸ் குக்கர், அயன் மற்றும் எலக்ரோனிக், எலக்ரிக்கல் பொருட்களை சிறந்த உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள நாடுங்கள்.

நியூ சிற்றி ரேடர்ஸ்,
319 A, K.K.S. றோட், யாழ்ப்பாணம்.
T.P:- 021 222 3226
(C-2938)

(இந்த ஸ்தாபனம் ஸ்ரான்லி வீதி, K.K.S. வீதிச் சந்தியில் இருந்து K.K.S. வீதியில் சத்திரச்சந்திக்குப் பக்கமாக 6 ஆவது கடை)



மீண்டும் விற்பனையில்...

Discover 135 CC (சிவப்பு, நீலம்) | Pulsar 180 CC (கறுப்பு, சிவப்பு) | Pulsar 200 CC (கறுப்பு, சிவப்பு)



S.J.மோட்டோர்ஸ்,
164, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 222 7566
(C-2955)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.08.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.